தமிழ் நாடு

ஆசிரியர்:- கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ்நாட்டு தமிழ்மருத்துவ அறிஞர்

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள்

15-5-51

வைகாசி இதழ்

விலை 4 அணா

“ தமிழர் நாடு ”

மலர் ௩] திருவள்ளுவராண்டு ௧௯௮௨ - வைகாசி [இதழ் ௧௰

பொருளடக்கம்

எது தமிழ் விழா? —தலையங்கம் ௧

நான்கு மணிகள்! —கி. ஆ. பெ. விசுவநாதம் ௮

நாணிப்போய் நடந்தாள்! —பி. வி. ஆர். பாண்டியன் ௧௧

அறிஞர் உலகம்! —ஆ. கோ. செல்வம் ௧௫

என்ன சொல்வேன்! —பி. வி. ஆர். பாண்டியன் ௧௭

பழம்பெருமை அழியட்டும்! இரா. இளந்திரையன் ௧௮

கட்டவும் வேண்டாம்
அறுக்கவும் வேண்டாம்! —வ. பா புருஷோத்தமன் ௧௯

ஏன் இல்லை! —முகிலன் ௨௦

தமிழின் தனிச்சிறப்பு! —ஒ. ரா. கிருஷ்ணசாமி ௨௧

கடிகை முத்துப் புலவர்! —முத்துராம கிருஷ்ணன் ௨௫

பேரறிஞர் ஷா! —ந. சிவப்பிரகாசம் ௨௭

சித்தவைத்திய ஆராய்ச்சிக் கழகம் —H. தேவதாஸ் ௩௧

இலட்சியவீரன் லெனின் —க்ரந்தை க. கணேசன் ௩௩

போது இயக்கம் —மீ. சு. இருளமுருகு பொற்செல்வி ௩௭

புத்தகம் ஒரு நண்பன் —B. வெங்கடத்தரசன் ௩௯

தமிழன் வேறு,
திராவிடன் வேறு—அறிஞர் ஞா. தேவநேயப்பாவணர் ௪௧

குறிப்பு:—“தமிழர் நாடு”வில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனையே. அவை எவரையும் குறிப்பிடா.

தமிழ் இலக்கணம்!



இது ஒரு தமிழ்ப் பூஞ்செடி ! ஐயாயிரம் ஆண்டுகளாகியும் இளஞ் செடியாகவே வாடாமல், வதங்காமல் வளர்ந்து வருகிறது. இயன்ற அளவு நீர் ஊற்றி வளர்க்கவேண்டியது இன்றைய தமிழ் மக்களின் நீங்காக் கடமையாகும்.

தமிழர் நாடு

"உணர்ச்சி கெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!"

ஆசிரியர்: கி. ஆ. பெ. விசுவநாதம் | திங்கள் இதழ்

மலர் ௩	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, வைகாசி ௧. (15—5—51)	இதழ் ௧௰

ஏது தமிழ் விழா?

சென்னையில் சிலர்கூடி "தமிழ் வளர்ச்சிக் கழகம்" என பெயர் வைத்துக்கொண்டு அதன் சார்பில் கடந்த சில ஆண்டுகளாக தமிழ் நாட்டில் தமிழ் விழாக்களை கொண்டாடி வந்தனர்.

முதல் விழா மதுரையிலும், இரண்டாவது விழா திருவாரூரிலும், மூன்றுவது விழா கோவையிலுமாக நடைபெற்றன. இப்போது நான்காவது விழா என்ற ஒன்றை இலங்கையிற் கொண்டாடி முடித்துவிட்டனர்.

முதல் விழா மதுரையில் தமிழ் அன்பர்களாலேயே நடைபெற்றது. இரண்டாவது விழா திருவாரூரில் தமிழ்ப் பகைவர்கள் சிலரது கூட்டுறவால் நடைபெற்றது. மூன்றுவது விழா கோவையில் தமிழ்ப் பகைவர்கள் பலரது கூட்டுறவாலும் நடைபெற்றது. நான்காவது விழா இலங்கையில் தமிழ்ப் பகைவர்களின் ஆதிக்கத்தினாலேயே நடைபெற்றிருக்கிறது.

“இலங்கையில் தமிழ் விழா டாக்டர் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களால் திறந்துவைக்கப்பெற்று, ஸ்ரீ ஸ்ரீனிவாசராகவை யரால் பிரசங்கம் செய்யப்பெற்று, ஸ்ரீ கணேசய்யர் அவர் கட்கு பொன்னுடை போற்றப்பெற்று, சுதேசமித்திரனுர் ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யங்கார் தலைமை வகிக்க, கல்கியார் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர் நன்றிகூற விழா இனிது முடிந்தது” என்ற செய்தியே மேற்கண்ட உண்மைகளை விளக்கப் போதுமானது.

முதல் இரண்டு மூன்று விழாக்களை நடத்துவதில் பெரும்பங்கு கொண்டு உழைத்த சர். பி. டி. இராஜன், சர். ஆர். கே. சண்முகம் போன்றவர்களின் ஒத்துழைப்பு இப்போது இவர்கட்குக் கிடைக்கவில்லையென்பது வெளிப் படையாகத் தெரிகிறது.

இவ்விழா நடத்துபவர்களை நாம் வெறுக்கிறோம். தமிழ் உணர்ச்சியுள்ள தமிழ் மக்கள் அனைவரும் வெறுக்க வேண் டும் என்றும் ஆசைப்படுகிறோம். வெறுப்பதுமட்டுமல்ல; அவர்களின் வஞ்சகச் செயலை விரைந்து தடுத்து தமிழை அவர்களிடமிருந்து காப்பாற்றியாக வேண்டும் என்பதும் நமது கருத்தாகும். ஏனெனில் :—

1. தமிழை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் அக் கழகத்தார்க்கு இருப்பதாகத் தெரியவில்லை.

2. அதை நடத்துகின்றவர்களில் பெரும்பான்மை யோர் தமிழ்ப் பகைவர்கள்.

3. அவர்களை தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் என்று கூறு வதைவிட தமிழ் அபிவிர்த்தி அசோஷியேஷன் வாலாக்கள் என்று கூறுவதுதான் உண்மையாக இருக்கும்.

4. மறைமலை அடிகள், திரு. வி. க., ச. சோமசுந்தர பாரதி போன்ற தமிழ்த் தலைவர்கள் இக்கழகத்திலில்லை.

5. இம்மூவரும் தமிழை வளர்க்க உரிமையுடையவர்கள் என் பதை ஒப்ப மறுத்தும் இவர்கட்கு வேருக தமிழில் கையை

வைத்துத் திருத்த தங்கட்கு உரிமையுண்டு என்பதையும் கலைக் கழகக் கூட்டத்தில் வெளிப்படையாகவே கூறி யிருக்கிறார்கள்.

6. இந்தி மொழி நுழைவினால் தமிழ்கெடாது என் பதும், பிறமொழிச் சொற்களையெல்லாம் தமிழ்மொழியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதும், தமிழில் இல்லாத ஒலிகளை ஒலிக்க F, Z போன்ற பிறமொழி எழுத்துக்களை யும் தமிழ் எழுத்துக்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதும், தமிழ் எழுத்துக்களின் உருவ அமைப்பை வட மொழி எழுத்துக்களின் உருவ அமைப்பைப்போல அமைக்க வேண்டும் என்பதும், வடமொழிச் சொற்களை தமிழில் சேர்த்து எழுதும் கலப்பு நடையே சிறந்த தமிழ் நடை என் பதும், இவைகளின் மூலம்தான் தமிழ் அபிவிர்த்தி யடையும் என்பதும் இந்த தமிழ் அபிவிர்த்தி அசோசியேஷன் வாலாக் களின் கொள்கையாகும். கொள்கைமட்டுமல்ல; அவர் களின் நடைமுறை வேலைத் திட்டமும் அதுவேயாம்.

தமிழ்நாட்டில் இவர்களின் வஞ்சகச் செயல் வெளி யாக்கப்பட்டு விட்டதால், இலங்கை போன்ற வெளிநாடு களுக்கு ஒடி தங்கள் விழாவை நடத்தத் தொடங்கியிருக் கின்றனர். அடுத்த ஆண்டு தென்னாபிரிகாவுக்கு ஓட இப் போதே முடிவு செய்திருப்பதாகவும் தெரிகிறது.

"எப்படியோ தமிழ்நாட்டை விட்டு இவர்கள் தொலைந் தால் போதும் தமிழ் தானே வளர்ந்து விடும்" என்று நம்பி இருந்தவர்களைக்கூட இப்போது "இவர்கள் வெளிநாடுகளி லும் போய் அங்குள்ள தமிழ் மக்களின் மொழி உணர்ச்சி யையும் பாழ்படுத்தி வந்தால் தமிழ்மொழி என்னாகும்?" என்ற கவலை பிடித்து இருப்பதாகத் தெரிகிறது.

அன்பர் திரு. T. S. அவினாசிலிங்கம் செட்டியார் அவர் கள் தமிழ் அபிவிர்த்தி அசோஷியேஷன் வாலாக்களின் தலைவரான பிறகு, சென்ற ஆண்டில்தான் தமிழ் எழுத்துக் களில் உயிர் எழுத்து எது? மெய்யெழுத்து எது? என்ப

தைக் கேட்டு தெரிந்து கொண்டவர். புலவர் R. P. சேதுப் பிள்ளை அவர்கள் மொழியைக் காப்பாற்றுவதைவிட தொழிலைக் காப்பாற்றுவதில் அதிக அக்கரை கொண்டவர். இவர்கள் இருவரும் தமிழ் விழா ? வில் கலந்து கொண்டதுபற்றி நமக்கு வியப்பு ஒன்றும் உண்டாகவில்லை. சிறந்த தமிழ் அறிஞர் டாக்டர் மு. வரதராசனுர் போன்றவர்கள் எப்படி இவ்விழாவிற்கு மனம் ஒப்பிச் சென்றூர்கள் ? என்பதே நமக்கு வியப்பாக இருக்கிறது.

இலங்கை தமிழ் விழாவில் தமிழ் ஏடுகளை மரயானை ஒன்று சுமந்ததாம். அந்த மரயானையை சிலர் சுமந்து ஊர் வலம் வந்தார்களாம். தமிழ் உணர்ச்சியுள்ளவர்களுக்கு இது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். மேலும், தமிழர்களைப் போல உள்ள மக்கள் சிலர், தமிழ் விழாவைப் போல ஒரு விழா நடத்துவதானுல், யானையைப் போல உள்ள ஒரு மரக்கட்டை, தமிழ்ச் சுவடியைப் போல உள்ள ஒரு சுவடிக் கட்டைச் சுமப்பதில் தவறு ஒன்றுமில்லை !

கடைசியாக தமிழ் விழா ? மரயானைகளும், மரமண்டைகளும் கூடிநடத்துகிற அளவுக்குப் போய்விட்டது. ஐயோ ! தீந்தமிழே ! ஏனோ இந்த இழிநிலை உனக்கு ! உரிமையுடைய தமிழர்கள் எல்லாம் ஒதுங்கியிருந்தால், ஒண்ட வந்த பிடாரிகள் எல்லாம் விழாக் கொண்டாடாமல் என்னசெய்யும் ?

தமிழும் இருக்கிறது. தமிழ் நாடும் இருக்கிறது. தமிழ் மக்களும் இருக்கின்றனர். தமிழ்த் தலைவரும், புலவரும், அறிஞரும், இளைஞரும் தமிழ் நாட்டில் நிரம்பி இருக்கின்றனர். அனைத்தும் இருந்தும் பயன் என்ன ? தமிழ் நாட்டில் தமிழர்க்கு தமிழ் உணர்ச்சி ஒன்றுதான் இல்லை !

உணர்ச்சி இருந்தால், ஒரு தமிழ் விழாவை உலகம் வியக்க நடத்தமாட்டார்களா ? நடத்தாமல் சும்மா இருந்தாலும், தமிழ்ப் பகைவர்களை விழா நடத்தும் அளவுக்கு விட்டு, விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களா ? வேடிக்கை பார்க்காவிட்டாலும் வெளிநாடுகளுக்குச்

சென்று விழா நடத்தி, தமிழ் மொழிக்கு அழிவு தேடுகின்ற மக்களை தமிழ் நாட்டில் காலடி எடுத்துவைக்க விட்டுவிடு வார்களா? இல்லை, அதனால் நடைபெறுகிறது. பூனை இருக்கிற் தொக்கைக்கண்டால் எலி பேரன் பேத்தி எடுக்கா மல் என்ன செய்யும்?

ஐயோ! தமிழ்த் தாயே! உன்கதி இதுதானா? நீ வஞ்சக மக்களின் கைப்படுவாயா? உன் வாழ்வு சீரழியத்தான் போகிறதா? இதனைப் பார்த்துக்கொண்டுதான் உன் மக்கள் உயிர் வாழப் போகிறார்களா?

வாழ்ந்தால் தமிழன் மானத்தோடு வாழவேண்டும், இன்றேல் மடிந்துவிடவேண்டும். வேறுவழி ஒன்றுமில்லை.

★

மலையப்பன் பிரிவு!

சிறந்த தமிழறிஞரும், திருக்குறள் தொண்டரும், "நாம் மூவர்," "அசோகன் காலத்தில்" "திருவள்ளுவர் ஆண்டு விளக்கம்," திருக்குறள் வந்த வரலாறு" என்ற நூல்களின் ஆசிரியரும், பொய்யாமொழிப் பதிப்பக உரிமையாளரும் ஆகிய அன்பர் ஏரல் திரு. அ. மலையப்பன் அவர்கள் அண்மையில் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்ற செய்தியைக் கேட்டு பெரிதும் வருந்துகிறோம்.

அவரது ஆன்மா சாந்தியடையவும், அவரது மனைவி மக்கள் ஆறுதல் அடையவும் வேண்டுகிறோம்.

கம்யூனல் ஜி. ஓ!

சென்னை அரசாங்கம் இதுவரை நடத்திவந்த வகுப்புவாரி உரிமைச் சட்டம் இனிமேல் செல்லாது என்றும், அது இந்திய அரசியல் சட்டப்படி தவறு என்றும் கடைசியாக முடிவு செய்யப்பட்டு விட்டது.

இது முற்போக்கு அடைந்த மக்களுக்கு மேலும், மேலும் முற்போக்கு அடையவழி செய்யுமே ஒழிய பிற்போக்கடைந்த, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னேறுவதற்கு சிறிதும் துணை செய்யாது.

'சுதந்தர நாட்டில், மக்கள் அனைவருக்கும் சம உரிமைகள் வழங்கப்படும்' என்ற சட்டத்தின் பிரிவும் இதனால் கொலை செய்யப்படுவதறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

சென்னை அரசாங்கத்தினரும் இது குறித்து வருந்தி புதிய நியமனங்களை நிறுத்தி வைத்திருப்பதாக அறிகிறோம். சட்டத்தைத் திருத்தும்படி சென்னையின் இருசபைகளும்

முடிவு செய்து டில்லிக்கு அனுப்பும் என்று நம்புகிறோம்.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை இச்சட்டம் அமுல் செய்யப் படாவிடில் இம்மாகாண மக்களில் பிற்போக்கடைந்துள்ள பெரும்பான்மையான மக்களின்வாழ்வு பாழாக்கப்பட்டு விடும் என்றே நம்புகிறோம்.

சட்டத்தின் துணைகொண்டு முன்னேறிய மக்களே மேலும் முன்னேறி நல்வாழ்வு வாழ்ந்து கொண்டு, பிற்போக்கடைந்துள்ள மக்களுக்கு முன்னேறத் தடை கல்லாக இருந்துவர விரும்பினால், அது அவர்கட்கு நன்மை விளைக்காது என நினைக்கிறோம்.

இவற்றை உடனே கவனித்துச் செய்யாவிடில் நிலைமை சீர்கேடடைந்து நாட்டின் அமைதிக்கு பங்கமும் ஏற்பட்டு விடலாம் என எச்சரிக்கிறோம்.

டில்லியில் தொழிற்சாலை!

டில்லி நகருக்கருகிலுள்ள போனுபட்டில் ஒரு சைக்கிள் தொழிற்சாலை அமைக்கப்படவிருக்கிறது என்றும், அதற்கு கால்கோல் விழா நடத்த இந்திய அரசாங்கக் கைத்தொழில் பிரிவு அமைச்சர் திரு ஹரி கிருஷ்ண மேதாப் அவர்கள் இணங்கியுள்ளார் என்றும், ஆண்டு ஒன்றுக்கு நூறுயிரம் சைகிள்கள் உண்டாக்கபபடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட தொழிற்சாலை யொன்று நமது தமிழ் நாட்டில் தோன்றுமா? தோன்றுவதற்கு ஏதேனும் வழியுண்டா?

வ உ. சி. துணைவியார்!

தேசபக்தர் வ உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் மனைவியார் திருச்செல்வி மீனுட்சி ஆச்சி அவர்கள் தூத்துக்குடியில் உள்ள தமது இல்லத்திலிருந்து இவ்வுலக வாழ்வை நீத்தார்கள்.

திரு. பிள்ளை அவர்களோடு உடனிருந்துஇவ்வுலகில் துய்க்க வேண்டிய துன்பங்கள் அனைத்தையும் துய்த்து உயிர்வாழ்ந்த அவர்களின் ஆன்மா சாந்தியடைய இவ்வளவு நாட்கள் ஆனது குறித்து பெரிதும் வருந்துகிறோம்.

தாயை இழந்து தவிக்கின்ற அவர்களின் மக்கள் நால்வரையும் ஆறுதல் பெறுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

மலாயாவில் தடை!

இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றிற்கு மலாய் நாட்டில் தடைவிதிக்கப் பட்டிருப்பதாக அறிகிறோம். ஆனால், காரணம் இன்னது என அறிய முடியவில்லை.

ஒருக்கால் பொது உடைமைக் கொள்கையை எதிர்க்க மலாய் அரசாங்கம் பூச்சாண்டி காட்டும் முறை இது என எண்ணுவதற்கும் இடமில்லை. ஏனெனில் 30 வெளியீடுகளும் 12,

அறிவுத்த உணவு

★

அயோக்கியன் முகத்தைக் காண யோக்கியன் வெட்கப் படுவதைவிட, யோக்கியன் முகத்தைக்காண அயோக் கியன் வெட்கப்படுவதே அதிகமாக இருக்கிறது.

இவ் உண்மையை முன் னவன் முகத்திற்காணும் வெறுப்பும், பின்னவன் முகத் திற்காணும் சிரிப்பும் மெய்ப் பிக்கும்.

தமிழ் மருந்துகள்

★

தழுதாலை இலையைக் கொண்டுவந்து தண்ணீரிற் போட்டு நன்ருகக் கொதிக்க வையுங்கள்.

கொதிப்பு ஆறி, இளஞ் சூடாக இருக்கும் போது வாய்வு பிடிப்பு உள்ள இடத்தைக் கழுவுங்கள். பிடிப்பு உடனே விலகு வதைக் காண்பீர்கள்.

வார இதழ்களும் தடை செய் யப்பட்டிருப்பதும் அவற்றுள் ஆனந்தவிகடன், கல்கி போன்ற வையும் அடங்கியிருப்பதுமே யாகும்.

1. "கலப்படத் தமிழில் எழுதி தமிழைக் கொலை செய் கின்றன."

2. "அட்டைப் படங்கள் மூலம் ஆபாசக் காட்சிகளை அறி விக்கின்றன."

3. "காமக் கதைகளை எழுதி இளைஞர்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கின்றன."

4. "சினிமா, நாடகக் கலை ஞர்களை தனிப்பட்ட முறையில் இழிந்த எழுத்துக்களால் தாக்கி, கேவலப் படுத்தி வருகின்றன."

5. "போட்டிப் பந்தயங் களை நடத்தி மக்களை ஏமாற்றி வருகின்றன."

என்ற காரணங்களால் தடை விதிக்கப் பட்டிருக்கு மானுல், இதற்காக நாம் பெரி தும் மகிழ்ச்சியடைகிருேம்.

இம்மாதிரித் தடை ஒன்று சென்னை அரசாங்கமும் விதித்து, பத்திரிகைகளின் மூலம் மக்கள் ஏமாற்றப்படு வதை தடுத்து நல் ஒழுக்கத்தை வளரச் செய்வது நல்லது என் றும் தெரிவித்துக் கொள்ளு கிருேம்,

★

நான்கு மணிகள்!

(கி. ஆ. பெ. விசுவநாதம்)

★ (முன் இதழ் தொடர்ச்சி)

அருள் எண்ணத்தோடு பிறப்பதைத் தவிர வேறு நல்ல பிறப்பு இல்லை. பெற்று வளர்த்த தாயை விட சிறந்தவர் எவருமில்லை. வளமை நிறைந்த வாழ்க்கைக்கு ஒத்த அழகு ஒன்றுமே இல்லை. இளமையைத்தவிர இன்பமானது எதுவுமேயில்லை. (33)

* * *

இரும்புக் கம்பிகளை இரும்பினாலேயே வெட்டுவர். நீருண்பவர் நீரினாலேயே வாய் கழுவுவர். அருஞ்செயல்களை அரிய முயற்சியினாலேயே செய்வர். பெருஞ்செயல்களை பெரியோரே செய்து முடிப்பர். (34)

* * *

வீரக்களிப்பு படையினர்க்கு போர்க்களத்தே தோன்றும். ஈகைக் களிப்பு இல்லாதார்க்கு ஈயும்போது தோன்றும். வியப்புக் களிப்பு ஒன்றை அறிந்து உணரும் போது தோன்றும். கீழ்மைக் களிப்பு பிறரிடம் பிதற்றித் திரிவோர்க்குத் தோன்றும். (35)

* * *

மையிடுதலால் அழகு பெற்று விளங்கும் கண்கள். நெய்யால் சுடர்விட்டு விளங்கும் விளக்குகள். மழையால் தளிர்விட்டு அழகு பெறும் குருக்கத்தி. நல்வழியில் பொருளைப் பெற்று, வழங்கி விளங்குவர் மேலோர். (36)

நண்பர்களுக்கு நகைச்சுவை இனிமை தரும். செல்வர்களுக்கு வழங்குவது இனிமை தரும். கணவனுக்கு மனைவியின் அன்பு இனிமை தரும். இசை அறிஞர்களுக்கே இசை இனிமை தரும். (37)

* * *

ஈகைக் குணம் உடைய செல்வரைச் சார்தலே இரப்பவரது தொழில். இரப்பவரைக்கண்டால் முகம் கவிழ்தலே இல்லையென்பவரது தொழில். பரபரப்புள்ள சேனையிற் சேர்தலே வீரம் உடையவர் தொழில். உயிர் கொன்று தின்று உடல் வளர்க்காமையே இரக்கமுடையாரது தொழில். (38)

* * *

கண்ணுற் கண்ட பொருள்களை உடனே செய்து காட்டுவர் கம்மாளர். பயனுள்ளவை என அறிந்தவற்றைச் செய்து காட்டுவர் அறிஞர். எல்லார்க்கும் இனிமை தருபவைகளைச் செய்து காட்டுபவர் சான்றோர். எண்ணியவற்றை திண்ணமாக செய்து முடிப்பவர் சினம் அற்றோர். (39)

* * *

ஒழுக்கம் தவறிய மக்களிடத்துச் செல்வம் நில்லாது. உயிர்கொண்டு செல்லும் கூற்று உளறுவதைக் கேளாது. எவ்வளவுதான் மறைத்தாலும் காமத்தை மறைக்க இய

லாது. எவர் முயன்றாலும் ஒரு நல்ல நாடு அழியாது. (40)

* * *

உயிர்கள் பிறக்கும்போது ஒழி யென்றால் ஒழியாது. இறந்து போகும்போது இரு என்றால் நில் லாது. செல்வம் சேரும்போது எது வும் தடையாயிராது. அது பிரிந்து அழியும்போது ஒன்றுமே நில் லாது. (41)

* * *

வீரர்களின் சிறப்பு போர் அற் றால் கெடும். மரங்களின் சிறப்பு வேர் அற்றால் கெடும். மலரின் சிறப்பு நீர் அற்றால் கெடும். அர சன் சிறப்பு படையற்றால் கெடும்.

* * *

அயலார் எனப்படுபவர்கள் நல் லியல்பு அற்றவர்கள். நண்பர்கள் எனப்படுபவர்கள் நல்லியல்பு உள் ளவர்கள். தந்தை என்று எவரா லும் சொல்லப்படுபவர் ஆசிரியர். தாய் என்று எல்லோராலும் சொல் லப்படுகிறவள் கருணையுடைய மகள். (43)

* * *

நாண் அற்றபோது வில் அற்றுப் போகும். பொறி வயப்பட்டபோது தீமையற்றுப் போகும். நீர் அற்ற போது பயிர் அற்றுப்போகும். நலம் அற்றபோது நட்பு அற்றுப் போகும். (44)

* * *

செய்நன்றி சாவது நன்றியறி யாரிடத்தில். விருந்தினர் வருந்தி சாவது அன்பில்லாரிடத்தில். இசை அழிந்து சாவது அறிவில்லா ரிடத்தில். ஊடல் அறிந்து சாவது புலவி அறியாரிடத்தில். (45)

* * *

மலரின் சிறப்பை அதன் மணம் கூறும். செயல் திறனை அவனது சொல் கூறும். வஞ்சக எண் ணத்தை அவனது மனம் கூறும். நெஞ்சகத் துள்ளதை அவனது முகம் கூறும். (46)

* * *

மழையின்றி மாநிலத்திற்கு நல மில்லை. மழையும் நன்னெறியில் லாதபோது இல்லை. நன்னெறி யும் அரசன் இல்லாது இல்லை. அரசனும் குடிமக்கள் இல்லாது இல்லை. (47)

* * *

மாலையின் அழகு மலர்களைப் பொறுத்தது. வண்டுகளின் நலம் தேனைப் பொறுத்தது. தேனின் சிறப்பு மலர்களைப் பொறுத்தது. மக்களின் உயர்வு ஒழுக்கத்தைப் பொறுத்தது. (48)

* * *

பிழை செய்த காலத்தும் அறி ஞர்கள் நண்பர்களை வெறுப்ப தில்லை. இடுக்கான காலத்தும் நற் குடியினர் உறவினரை வெறுப்ப தில்லை. செல்வம் வந்த காலத்தும் கீழ் மக்கள் பிறர்க்கு வழங்குவ தில்லை. வறுமை வந்த காலத்தும் பெரியோர் இல்லை யென்பதில்லை.

* * *

நல்ல உணவும் பிணியுள்ள உட லுக்கு கேடு செய்யும். நல்ல சொற் களும் அறிவற்ற மக்களைத் துன் புறுத்தும். நல்ல மக்களும் தன் தீச் செயலால் வருந்துவர். நல்ல அரச னும் அளவுக்கு மீறிய சேனையால் துன்புறுவான். (50)

* * *

வெறுப்பதற்கு உரியது பிறரை இகழும் செயல். விரும்புவதற்கு உரியது நண்பனின் உறுதியான சொல். தெளிந்து கடைப்பிடிப் பதற்கு உரியது அறச்செயல். தேர்ந்து கொள்வதற்கு உரியது நூல்களின் மெய்ப்பொருள். (51)

ஆற்று வெள்ளத்தை உள் அடக்கும் குளங்களும் உள்ளன. அரசர் விரும்பி மகிழும் குடிமக்களும் உள்ளனர். வேதம் போற்றுகின்ற சித்தர் பாடல்களும் உள்ளன. வேள்வி போற்றுகின்ற வேளாண்மையும் உள்ளன. (52)

* * *

வேளாளன் என்பவன் வித்தும் ஏரும் உடையவன். பார்ப்பனன் என்பவன் தன்காரியத்தை நிறைவேற்றிக் கொள்பவன். துணைவி என்பவள் அழகும் அறிவும் ஒருங்கே உடையவள். தலைவன் என்பவன் சேனைகளோடு ஒன்றுபட்டு உடன் உறைபவன். (53)

* * *

யானையை உடையவர் அதன் சினங்கண்டு மகிழ்வர். குதிரையின் விரைந்த ஓட்டத்தைக்கண்டு மன்னர்கள் மகிழ்வர். மங்கையரின் நாணத்தைக்கண்டு நன்மக்கள் மகிழ்வர். தீயதையும், தீமையையும் கண்டு தீயவரே மகிழ்ந்து உழலுவர். (54)

* * *

கண்களைவிட சிறந்த உறுப்புகள் ஒன்றுமில்லை. கணவனைவிட உறவினர் மகளிர்க்கு எவருமில்லை. மக்களைவிட உயர்ந்தபொருள் பெற்றோர்க்கு எதுவுமில்லை. ஈன்ற தாயோடு ஒப்பாக எண்ண பிள்ளைகளுக்கு எதுவுமேயில்லை. (55)

* * *

கற்றவரை விரும்பி அவரோடு வாழ்பவர் கற்றவரே யாவர். இரக்கமற்ற கொடிய மனத்தவர் இடர் செய்பவரே யாவர். உண்மையை தெளிவாகக் கூறுதவர் பகைவரே யாவர். சிற்றறிவு உடையவர் எப்போதும் பாம்புப் புற்றுக்கே ஒப்பாவார். (56)

* * *

சிறந்த செயல்களைச் செய்பவர் உயர்ந்த அறிஞர்கள். தீய செயல்களைச் செய்பவர் தாழ்ந்த அறிவினர். அறச் செயல்களில் வழுவாதவர் நற்குடியிற் பிறந்தோர். பேராசையைத் துறந்தவர்கள் பெருநலம் பெறுவோர். (57)

* * *

ஞாயிறும் விண்மீனும் என்றும் உள்ளன. பிணியும், நலமும் என்றும் உள்ளன. ஈவாரும் ஏற்பாரும் என்றும் உள்ளனர். இறப்பாரும், பிறப்பாரும் என்றென்றும் உள்ளனர். (58)

* * *

உயிர் கொல்லாது உண்பவன் நல் உணவு உண்பவன். முகம் கோணி கடுகடுப்பாயிருப்பவன் வெறுக்கப்படுபவன். பிறர்க்கு நன்மை செய்யாமல் வாழ்பவன் துணையற்றிருப்பவன். ஒழுக்கம் தவறாது வாழ்பவன் எல்லோர்க்கும் இனியவன். (59)

* * *

பிறருக்குக் கொடுத்து உண்பது புகழுக்கு இடம்தரும். பிறர் பொருளைப் பறித்து உண்பது பழிக்கு இடம்தரும். விரும்பாதார் முன் செல்வது இகழ்ச்சிக்கு இடம் தரும். தகுதியறியா மக்களிடம் ஒன்றை வேண்டிச் செல்வது பகைக்கு இடம்தரும். (60)

* * *

நெய்யைச் சொரிய, சொரிய நெருப்பு வளரும். வாழ்த்தி வணங்க, வணங்க பெரியோர் மகிழ்வர். கன்று ஊட்ட, ஊட்ட பால் பெருகும். மகிழ்ந்து போற்றப் போற்றவிருந்தினர் பெருகுவர் (6)

* * *

பழியற்ற குடிப்பெருமையை நன்மக்களாற் காணலாம். நண்பனது உண்மைக் குணத்தை கேடு வந்த காலத்தில் அறியலாம். செல்வப் பெருக்கினால், முற்போக்கு வளர்ச்சியைக் காணலாம். பலராலும் புகழும்படி நடப்பவனை பகைவனும் வணங்கக் காணலாம். (62)

(தொடரும்)

கற்பனை உரையாடல்

நாணிப்போய் நடந்தாள்!

(பி. வி. ஆர். பாண்டியன்)

★

தமிழன்னை : யாரம்மா நீ? தெரிய வில்லையே.........

இந்திக்குமரி : ஏ கிழவி! என்னை 'நீ நான்' என்று மரியாதை இல்லா மற் கூறாதே. நான் யார் தெரியுமா? வெளிநாடுகளில் பாரதத்தின் புகழ் பரப்பும் பாவை; பாரத நாட்டின் பொது மொழியாகப் போகும் பூவை. இந்தி என்பது என் பெயர் தெரிந் ததா? ஜாக்கிரதை.!

தமி : நீ சொல்லுவதெல்லாம் சரி அம்மா. ஆனால் பாரதத்தின் புகழை வெளிநாடுகளில் பரப்புவது நீயா? இதைச் சொல்ல உனக்கு எப்படி மனம் துணிந்தது?

இ.கு : கிழவி:! எது பேச்சுக்குப் பேச்சு மேலேயே போகிறாயே......

தமி : கோபிக்காதே பேத்தி வெளிநாட்டார்கள் உன்னைக்கண்டு பாரதத்தின் புகழை அறியும்படி அப் படி உன்னிடம் என்ன இலக்கியங் கள் உள்ளன? எங்கே சற்றுச் சொல்லு பார்ப்போம். குவலயம் போற்றும் குறள்உண்டா? கற்றறிந் தோர் ஏத்தும் கவியுண்டா? உம் பரும் போற்றும் கம்பரின் கற்பனை உண்டா? சிங்காரச்சிலம்பு உண்டா? கொந்தார் குழல் மணிமேகலையும், நந்தாச்சுவைகொள் சிந்தாமணியும் உண்டா? இல்லை வேறு ஏதாவது ஒரு சிறு இலக்கியமாவது உலகம் போற்றும் அளவுக்கு இருக்கிறதா?

இ-கு இலக்கியங்கள் இல்லா விட்டால் என்ன? நான் நவீன உலகிற்குத் தேவையான நாகரிக நாரீமணி. இதுபோதாதா என் புகழுக்கு?

த.அ. நாகரிக உலகம் உன்னை நாடுமா? அப்படி என்ன உன்னிடம் நவ நவமாய் விஞ்ஞான நூற்கள் இருக்கின்றன? கணத்துக்குக் கணம் முன்னேறிச் செல்லும் விஞ் ஞான உலகத்தைப் பற்றிப் பேசு வதற்கே உன்னிடம் சொற்களுக்குப் பஞ்சமாயிக்கும்போது, நவீன உலகம் எப்படி அம்மா உன்னை உவகை யோடு ஏற்றுக்கொள்ளும்?

இ.கு. என்னைப் போற்றுபவர்கள் தானே இந்தியாவில் அதிகம்?

த.அ. அதிகமா? எண்ணிக்கை யில் அதிகமாயிருந்து என்னபயன்? எல்லாச் சிப்பிகளிலும் முத்து இருக் கிறதா? முத்துச் சிப்பிகளின் எண் ணிக்கை மிகவும் சொற்பந்தானே? மேலும் என்மக்களான மூன்று கோடிவீரர்கள் இமயம்முதல் குமரி வரைமட்டும் இன்றி, இவ்வுலகத்தை யே தம் இணையற்ற வீரத்தால் வென்று தம் மடிக்கீழ்கொண்டு வரத்தக்க ஆற்றலுடையவர்கள். இதனை மறந்துவிடாதே! இமயத் தில் தன்கொடியை நாட்டி, வட வாரிய மன்னர்களைக் கல்சுமந்த

கசடர்களாக்கிய சேரன் செங்குட்டுவன் என்மகன். முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் வென்ற சோழன் இராச ராசன் என்மகன். வளைந்த செங்கோலைத்தன் உயிர்கொடுத்து நிமிர்த்திய, ஆரியப்படை கடந்த பாண்டியன், நெடுஞ்செழியன் என் மகன். எனவே மக்களின் ஆற்றலை அறியாது பேசும் சிறுமியே! சற்றுச் சிந்தித்துப்பார்.

இ. ரு. என்னதான் இருந்தாலும் நான்தானே இனித்தமிழ் நாட்டில் மட்டுமின்றி, இந்தியா முழுமையும் ஆட்சிசெலுத்தப்போகிறேன்.

நீ. அ. இது வெறும் பகற்கனவே. தங்கள் தாய்க்காக இன்னுயிரையும் தத்தம் செய்யும் இயல்பினர் என் மக்கள். அவர்கள் உயர்ந்த அறிவுநெறியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பழகியவர்கள். இந்தியாவின் வேறு எப்பாகத்தில் நீ ஆதிக்கம் செலுத்தினாலும், தமிழ் நாட்டில் மட்டும் உன்கை ஓங்காது. அப்படி ஓங்கும்படி விட்டுவிட மாட்டார்கள் என் மக்கள். முன்பு ஒரு முறை நீ உனது ஆட்சியை என் நாட்டில் நிலைநிறுத்த முயன்றபோது, உயிரைக் கொடுத்து உன்னை எதிர்த்த தாலமுத்து, நடராசர்களைக் கண்டு நடுங்கி என் நாட்டை விட்டே நீ ஓடிவிடவில்லையா? அதற்குள்ளாகவா அதனை மறந்து விட்டாய்? இனி மீண்டும் உன்படையெடுப்பை ஆரம்பித்தால் என்மக்கள் உன்னை இருக்குமிடம் தெரியாமல் செய்து விடுவர்.

இ. ரு. இப்போது உன் மக்களிலே சிலர் என்மேல் பிரியப்படுகிறார்களே! இதற்கு என்ன செய்கிறாய்?

நீ. அ. உண்மையில் அவர்கள் மேல் குற்றமேயில்லை. உன் இளமை அழகையும், வெளிப்பகட்டையும் கண்டு தம் நிலையறியாமல் தடுமாறுகின்றனர். நீ புனைந்திருக்கும் வேடம் அவர்களுக்குத் தெரியவில்லை. கோட்டானின் அலறலைக் குயிலின் இசை என்று உன்மேல்கொண்ட மோகத்தால் கூறுகிறார்கள்; வேம்பை வெல்லமென்று நினைக்கின்றனர். ஆனால் இன்னும் சில நாட்களில் உன் சாயம் வெளுத்து விடும். அப்பொழுது அவர்களும் சுய உணர்வு பெறத்தான் போகின்றனர். வடமொழியையும், உருதுவையும் கள்ளக்காதலால் காதலித்து கலந்து கொண்டிருக்கும் கணிகை நீ, என்பதை அவர்களும் அறியத்தான் போகின்றனர். எ பேத்தியே! அதோ பார்! உன்னை எதிர்த்து விரட்ட தமிழ் நாட்டில் இப்போதே தமிழர்பட்டாளம் திரள்கிறது, பேத்தி! உன்னை எதிர்த்து என் மக்கள் தொடங்கப் போகும் போர், தமிழ் நாடு தமிழர் நாடாக மாறும் வரை நீடிக்கும்!

இ. ரு. இந்தா...கிழவி! எது "பேத்தி கீத்தி" என்று வரையறையின்றிப் பேசுகிறாயே! என்னைப் பார்த்தால் அவ்வளவு இளப்பமாகத் தெரிகிறதோ உனக்கு?

நீ. அ. உம்! இது வேறுபகட்டா உனக்கு? என்பேத்திக்குப் பேத்தியாகக் கூடிய வயது கூட இல்லை உனக்கு. நேற்றுப் பிறந்தவள் நீ. அத்தகைய நீ என்னை எதிர்த்துப் பேசுகிறாய். பெண்ணே! மரியாதையாக உடனே இவ்விடத்தை விட்டு நீங்கு. இல்லையெனில் என் மக்கள் உன்னை நையப்புடைத்து அனுப்பி விடுவார்கள். அதோ அவர்களும் வருகிறார்கள். ஓடிப்போ! ஓடு விரைவில் நில்லாதே!

★

திருச்சியில் விற்பனையாளர் :

A. S. ஜெகதீச அய்யர்

தென்னூர்.

மணி மன்ற அரிய வெளியீடுகள் !

குறைந்த இதழ்களே கைவசமுள்ளன

	ரூ.	அ.
1. இராசமாதேவி	1	4
2. சரவிளக்கு	2	0
3. சிற்பியின் கனவு	2	0
4. இன்பவல்லி	1	0
5. மழலை மொழி	0	6
6. அமுத மொழி	0	6
7. இன்ப மொழி	0	6
8. தேசியவீரன்	1	0
9. நாம் இருவர்	2	8
10. நேத்தாஜியும் டில்லி பவனியும்	0	12
11. மங்கிய நிலவு	0	12
12. இசைவாணி	1	12
13. முள்ளும்மலரும்	1	2

1. இராசமாதேவி — ரூ. 1 அ. 4
   சரிதம் தழுவிய நாடகம்
   ஆசிரியர் : ப. நீலகண்டன்

2. சரவிளக்கு — 2 0
   நகைச்சுவைக் கட்டுரைகள்
   ஆசிரியர் : 'சுகி'

3. சிற்பியின் கனவு — 2 0
   இனிய சிறு கதைகள்
   ஆசிரியர் : 'மாறன்'

4. இன்பவல்லி — 1 0
   கருத்தையள்ளும் ரேடியோ நாடகம்
   ஆசிரியர் : ப. நீலகண்டன்

5. மழலை மொழி — 0 6
6. அமுத மொழி — 0 6
7. இன்ப மொழி — 0 6
   குழந்தைப் பாடல்கள்
   கவிஞர் பாரதிதாசன், யோகி சுத்தானந்த பாரதியார், தேசிய விநாயகம் பிள்ளை முதலிய பல அறிஞர்கள் பாடியவை.

8. தேசியவீரன் — ரூ. 1 அ. 0
   வீரம் செறிந்த கதை
   ஆசிரியர் : சி. பி. மாசிலாமணி முதலியார், பி. ஏ.,

9. நாம் இருவர் — 2 8
   சிறந்த திரை நாடகம்
   ஆசிரியர் : ப. நீலகண்டன்

10. நேத்தாஜியும் டில்லி பவனியும் — 0 12
    ஆசிரியர் : சுந்தரம்

11. மங்கிய நிலவு — 0 12
    சிறந்த நாவல்
    ஆசிரியர் : 'அகிலன்'

12. இசைவாணி — 1 12
    சிறு கதைகள்
    ஆசிரியர் : ப. நீலகண்டன்

13. முள்ளும்மலரும் — 1 2
    சிறந்த சிறுகதைகள்
    ஆசிரியர் : இளங்குமரன்

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

— செயலாளர் —

மணி மன்றம், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

கருத்துரை

இலக்கியப் பொழில்!

பெயருக்கு ஏற்ப அமைந்துள்ள ஒரு இலக்கியப் பூஞ்சோலை.

ஆசிரியர் :
சம்போலா மாஸ்கரேனஸ், M. A.
விலை 1—8—0
ஒற்றுமை ஆபீஸ்.
தியாகராயநகர், சென்னை. 17.

தமிழின் தனிச்சிறப்பு.

தமிழ் மொழியின் தனிச்சிறப்பு பற்றி பேராசிரியர் மறைமலை அடிகளின் சொற்பொழிவு.

கேட்டு எழுதியவர் : பழம்நீ.
விலை அணா 0—4—0
பாரி நிலையம்.
59. பிராட்வே, சென்னை. 1.

வகுப்புரிமை வேண்டுமா?

வகுப்புரிமை போராட்டத்தைப் புள்ளி விவரங்களோடும், தக்கசான்றுகளோடும் விளக்குகின்ற ஒரு அரிய நூல்.

ஆசிரியர் : பாலையவனம் சின்னராஜா,
விலை அணா 0—12—0
மல்லிகைப் பதிப்பகம்.
லெட்சுமிபுரம், புதுக்கோட்டை.

ஐந்து செல்வங்கள்.

தமிழ் மக்களுக்கு வேண்டிய ஐந்து செல்வங்களைப் பற்றி விளக்கி வெளி வந்த ஒரு ஆராய்ச்சி நூல்.

ஆசிரியர் : கி. ஆ. பெ. விசுவநாதம்.
விலை அணா 0—8—0
தமிழர் பண்ணை.
மதுரை ரோட், திருச்சிராப்பள்ளி.

இலட்சியவாதி!

ஒரு நாடக நூல். சமூக சீர்திருத்தக் கருத்துக்களை நன்கு அமைத்து திறமையாக எழுதப் பெற்றுள்ளது.

ஆசிரியர் : "மேகலை."
விலை அணா 0—12—0
சுந்தரம். "இளங்கோ நிலையம்"
ஆத்தூர். P. O. சேலம் வட்டம்.

குடியும் குறளும்.

சென்னை மதுவிலக்கு இலாகாவிற்காக குடியைப் பற்றிய குறள்களை புதிய முறையில் எழுதியிருக்கும் ஒரு சீர்திருத்த நூல்.

ஆசிரியர் : கி. ஆ. பெ. விசுவநாதம்,
விலை தெரியவில்லை.
சென்னை சர்க்கார் செய்தி விளம்பர இலாகா, கவர்ன்மெண்ட் பிரஸ்,
சென்னை.

இந்திய ரெட்கிருஸ் சங்கம் இளைஞர் பகுதி.

மாணவர்களுக்கு ஏற்ற பகுதிகளையும், ஆசிரியர் அனுசரிக்கவேண்டிய முறைகளையும். பிறருக்கு தொண்டு செய்ய வேண்டிய கடமைகளையும் முறைப்படி எழுதிவெளிவந்துள்ளது.

விலை இல்லை.
இந்திய ரெட்கிருஸ் சங்கம்.
சென்னை மாகாண ஆபீஸ்.
மாண்டித் ரோடு, எழும்பூர் சென்னை.

"நாட்டாண்மை"

ஒரு புதிய மாத இதழ்,
ஆசிரியர்: வெ. நாராயணன்,
விலை அணா 0—2—0
மவுண்ட் ரோடு, சென்னை.

அறிஞர் உலகம்!

(ஆ. கோ. செல்வம், ஆர்க்காடு)

★

உலகில் எத்தனை மொழிகளுண்டோ அத்தனை மொழிகளையும் தமிழ் எழுத்துக்களில் ஆயுத எழுத்தின் உதவி கொண்டு எழுதிவிடலாம். பறவைகள் மிருகங்கள் ஆகியவற்றின் ஒலிகளைக்கூட இந்த எழுத்தின் உதவியால் தமிழில் எழுதிவிடலாம்.

— பா. வே. மாணிக்க நாயகர்

மணம் ஆகி ஓர் ஆண்டு வரையில் மனைவி கருக்கொள்ளாதபடி செய்துகொள்ளவேண்டும்; ஒரு பிள்ளை பெற்று மூன்றாண்டு செல்வதற்கு முன் மனைவி வேறொரு மகவினைப் பெறுதலும் ஆகாது.

— மறைமலை அடிகள்.

மணம் விரும்பும் கைம்பெண்ணைத் தடுத்தலுங்கூடாது; விரும்பாதவளை வலியுறுத்தலுங்கூடாது.

— திரு. வி, க.

தலைமுறை தலைமுறையாக வந்த சில பழக்கங்களை வைத்துக்கொண்டு படிக்காதவன் தயங்குகிறான்; கட்சியாட்கள் சொல்லும் சில கருத்துக்களைக் கேட்டு மயங்கிப் படித்தவன் தயங்குகிறான்.

— மு வரதராசனர்.

எவன் தன்னிடமுள்ள குழந்தை உள்ளத்தை இழந்து விடுகிறானோ அவன் குழந்தைகட்குக் கல்வியே புகட்ட முடியாது.

— தாகூர்.

ஏழையின் செல்வங்களுக்குக் குழந்தைகள் என்று பெயர்; பணக்காரரின் தரித்திரங்களுக்கு மலடுகள் என்று பெயர்,

— டேனிஷ்.

ஒரு பெண் மனம் விரும்பி ஏற்றுக்கொள்ளும் காதலில் தான் அவளுடைய வாழ்வும் கற்பும் அடங்கி இருக்கின்றன.

— ஜார்ஜ்எலியம்.

துன்பம் வந்து விடுமோ என்ற எண்ணங்கள் துன்பத்தை விடத் துயரமானவை

— எசாடிக்.

உன்னையே நினைத்துக் கொண்டிராதே; உன்னை வெறுப்பவனை நினைத்துக் கொண்டிரு.

— சேக்ஸ்பியர்.

★



இலக்கியம்

என்ன சொல்வேன்?

"பி. வி. ஆர். பாண்டியன்"

ஆர்க்கின்ருர் அருந்தமிழர் அன்புச் சொல்லால்
ஆர்வமுடன் அன்னையவள் வாழ்க என்ருர்
சேர்க்கின்ருர் சிந்தையினில் தமிழ்மேற் காதல்
செகமெங்கும் செந்தமிழால் முழக்கம் செய்தார்
வேர்க்கின்ருர் வேற்ருரிவ் வொலியைக் கேட்டு
வெலவெலத்து நடுங்கிநமை வணக்கம் செய்தார்
பார்க்கின்றேன் இக்காட்சி எந்தன் உள்ளம்
பெறுகின்ற பெருமகிழ்வை என்ன சொல்வேன்?

வஞ்சகர்தாம் வாழ்விழந்து வாடு கின்ருர்
வரிப்புலிகள் எந்தமிழர் வேங்கை போன்ருர்
செஞ்சரங்கள் தீயுமிழச் செலுத்து கின்ருர்
செத்தார்கள் எதிர்த்திட்டோர் ஜெயங்கொண்டோம்நாம்
பஞ்சைகளும் பணக்காரர் என்றபேச்சும்
பைந்தமிழர் நாட்டிலில்லை சமமே என்ருர்
மிஞ்சிவரும் இம்முழக்கம் தன்னைக் கேட்டு
மிகப்பொங்கும் தமிழுணர்வை என்ன சொல்வேன்?

பெண்ணினத்தின் பெருமையினைப் பேணிக் காப்போம்
பெருந்துயரால் வாழநிற்கும் விதவைப் பெண்டிர்
கண்ணிலின்று பொங்கிவரும் கண்ணீர் தன்னை
கருத்துடனே துடைத்திட்டுக் கவலை தீர்ப்போம்
புண்படைத்த நம்நாட்டைப் புதுக்கி நன்ருய்
புகழுறுதற் கேற்றவகை செய்வோம் என்றும்
பண்பாடிப் பழந்தமிழர் முழக்கம் செய்தோர்
பகையஞ்சிப் பதுங்குவதை என்ன சொல்வேன்?

3

பழம் பெருமை அழியட்டும்!

(இரா. இளந்திரையன்)

◦◦○ ★ ○◦◦

1. தமிழனுக்கு வீரமுண்டு என்று கூறும்
தமிழ்நூல்கள் அத்தனையும் கொளுத்த வேண்டும்!
தமிழனுக்கு மானமுண்டு என்று காட்டும்,
சரித்திரங்கள் எல்லாமே ஒழிக்க வேண்டும்!
இமயவெற்பில் கொடிநட்டான் தமிழன் என்று
இயம்புநூல் உண்டென்னில் எரிக்க வேண்டும்!
இமயவர்க்கு அடிபணிந்து 'ஏதும்' அற்ற
இழிதமிழற் கேன் இந்தப் பெருமை எல்லாம்?

2. கடல்மீது தமிழ்க்கப்பல் சென்ற தென்னும்
கட்டுரையைத் திக்கிரையாய் ஆக்க வேண்டும்!
கடல்தாவிக் கடாரத்தைக் கொண்டான் என்னும்
கல்வெட்டைப் பொடிப்பொடியாய் நொறுக்க [வேண்டும்
உடல்பேண வகையற்று உயிரைத் தீய்த்து
உறைதற்கு இடமின்றிச் 'சாது' வாகிக்
கடல்சூழ்ந்த பிறநாட்டில் 'கூலி' யாகும்
கதியற்ற தமிழனுக்கேன் பெருமை எல்லாம்!

3. மூவேந்தர் ஈங்கிருந்தார் என்று கூறும்
முதியோரைத் தவறாது கொல்ல வேண்டும்!
'காவேரி சோறூட்டும் நாடு!' என்னும்
கதைகளுக்கு முடிவு இன்றே காண வேண்டும்!
நாவேதம் பேசுபவர் தம்மை நத்தி
நன்னாட்டில் அடிமைகளாய் வறியராகிச்
"சாவே! நீ வா!" என்று ஏங்கி நிற்கும்
தரித்திரர்க்கு ஏன் இந்தப் பெருமை எல்லாம்!

4. பழம்பெருமை போதுமென இருக்கின்றார்கள்
பரம்பரைக்குப் பெரும்இழிவு தேடி விட்டார்!
அழும்உரிமை தனைக்கூட இழந்து விட்டார்
அநியாயமாய்த் தமிழர் அந்தோ! அந்தோ!!
பழம்பெருமை அழியட்டும்! தமிழர் நாட்டில்
பரம்பரையின் புகழ் இன்றே சுடர்விடட்டும்!
பழம்பெருமை பேசாது உரிமை நாட்டப்
பரவட்டும் புரட்சித்தீ! தமிழர் நாட்டில்!

கட்டவும் வேண்டாம் அறுக்கவும் வேண்டாம்

(திரு. வ. பா. புருஷோத்தமன்)

★

அன்ெருரு நாளில் அம்பலவாணன்
என்ெருரு நண்பனும் யானுமோர் வேலையாய்
இருவருமாக வீட்டை விட்டிறங்கித்
தெருவழி நோக்கிச் சென்றிடுகாலை,
காலப்போக்கில் கணவனை யிழந்த
வாலையொருத்தி வருதல் கண்டோம்;
"அறுத்தவள் சீசீ, ஆகாச் சகுனம்
பொறுத்துப்போகலாம்" என்றனன் நண்பன்;
கொதித்த தெனக்குள் கொழுவிய குருதி,
மிதித்தனன் தரையை வேகமதாக,
"வருவையாயினும் வாராயாயினும்
செல்குவன்யான்" எனச் செப்பினன்; நண்பன்
செய்வகை யறியா தேங்கியே நின்ருன்.
என்னே உலகம்! என்னே அறிவு!!
காலம் முற்றியோ கடுநோயுற்ருே
கொண்டவனிறந்தால் கோதை என் செய்வாள்?
அதற்கென் றவளை வாட்டி வதைப்பதா?
மலர்களை மறுப்பதோ, திலக மழிப்பதோ,
நறுமண மஞ்சள் கூடாதென்பதோ?
பழியோரிடமும் பாவமோ ரிடமா?
மனைவியை யிழந்த கணவன் றனக்கு
இனையன அலங்கோலங்களு முண்டோ?
ஆணுக் கொன்றும் பெண்ணுக் கொன்றும்
நீதி வெவ்வேருய் நிகழ்தலு மழகோ?
நம்முதல் தாயும் நம்முதல் தந்தையும்
தம்முள் அன்பால் கலந்திட்ட ஞான்று
தாலிக் கயிறு தலை காட்டியதோ?
ஆதலால், என்னருந் தோழர் தோழியரே!
மட்கிப்போன கயிருந் தாலியைக்
கட்டவும் வேண்டாம், அறுக்கவும் வேண்டாம்.

(இக்கவிதை சென்னை மாணவர் மன்றத்தின் 1950ம் ஆண்டுக் கல்லூரிக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது.)

ஏன் இல்லை?

— முகிலன் —

ஏன் இல்லை உழைப்போர்க்கு உயர்ந்த வாழ்வு?
எனக் கேட்கும் துணிவின்னும் பிறக்கவில்லை;
தேன்சொரியுந் தமிழ்நாட்டில் வாழும் மக்கள்
செல்கின்றார்; கடல்கடந்து வாழ்வு மில்லை!
ஊணின்றி, உடையின்றிக், கல்வி யின்றி,
உறக்கத்தில் இருக்கின்றார்; விழிப்பு மில்லை!
வானின்றி வாடுகின்ற பயிர்கள் போல
வாட்டமுறல், தமிழரசிலாம லன்றோ? 1

தமிழ்நாட்டில் இல்லாத பொருளும் இல்லை;
தரணியிலே தலைதூக்க வகையு மில்லை!
தமிழ்நாட்டி லில்லாத வளமு மில்லை;
தமிழ்மக்கள் நலிவொன்றுங் குன்ற வில்லை!
தமிழ்நாட்டில் இல்லாத அறிஞ ரில்லை
தமதாட்சி நிறுவவொற் றுமைதா னில்லை!
தமிழ்மொழியில் இல்லாத இனிமை யில்லை
தாய்மொழியைப் புறக்கணிப்போர்
குறைய வில்லை! 2

தமிழ்கற்றால் சிறப்பான வாழ்வு இல்லை;
தமிழ்தன்னைக் கற்பதற்கு ஆர்வ மில்லை!
தமிழுக்குத் தமிழ்நாட்டில் உயர்வு இல்லை;
தாய்மொழியில் 'வணக்க'மென்றால் மதிப்பு [மில்லை!
அமுதான மொழியினிலே கலைகள் காண
அமைப்பில்லை; ஆய் வறிஞர் முயற்சியில்லை!
தமிழுக்கா வளமில்லை? தமிழனுக்கா வீரமில்லை?
தமிழ்நாட்டில் தமிழரசு ஏன்தான் இல்லை? 3

தமிழின் தனிச் சிறப்பு!

(ஓ. ரா கிருட்டிணசாமி B. Com
தலைவர், தஞ்சை மறைமலை மன்றம்.)

மக்கள் ஒன்றுகூடி வாழும் இயல்பினர். அவர்களது ஒன்றிய வாழ்விலே ஒருவருக்கொருவர் தம் தம் எண்ணங்களைத் தெரிவித்தலானது அவசியமன்றோ! மக்கள் தோன்றிய தொடக்க காலத்தில் கை, கால், கண் முதலாய உறுப்புகளின் அசைவால் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர். பின்னர், காலஞ் செல்லச் செல்ல உடல் உறுப்புகளின் அசைவையொட்டி ஒலிகள் ஏற்பட, அவ்வொலிகள் பேச்சாக மாறிற்று. பேச்சுத் திறத்தின் முதிர்ச்சியே மொழியாயிற்று.

இவ்வாற்றான், உலகின்கண் முதற்கண் தோன்றிய மொழி தமிழ் மொழியாம் ஆகவேதான் தமிழ் ஒன்றே இயற்கை மொழி, ஏனையவைகள் அதன் வழித்தோன்றல்கள் என்று கருதப்படுகிறது.

மூலமொழி தமிழ்தான் என்பதற்கு என்ன சான்று? என்ற கேள்வி எழக்கூடும். இதுகுறித்து மக்களின் தோற்றம் பற்றி ஆராய வேண்டுவது அவசியமாகும். மொழி மக்களிடையே தங்கள் எண்ணங்களை ஒருவருக்கொருவர் தெரிவிப்பதற்காக ஏற்பட்ட கருவியேயாதலின், மொழியின் தோற்றத்திக்கு மக்களின் தோற்றம் ஆதாரமாகும். இதிலிருந்து முதலில் தோன்றிய மக்கள் பேசிவந்த மொழியே முதன் மொழி என்பது பெறப்படுகிறது. இப்பொழுது முதலில் தோன்றிய மக்கள் யாவா என்று பார்ப்போம். கதிரவனின் கதிர் பிழம்பாகத் தெறித்து வந்ததாய இப்பூமியின் நடுப்பாகமே உயிர்கள் தோன்றுவதற்கு ஏற்ற வெட்பதட்ப நிலைமை முதற்கண் அடையப்பெற்றது என்று நிலநூல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். அத்தகைய நடுப்பகுதிதான் பேருவையும் அதனின்றும் பெருகிஓடின பேராற்றையும் பஃறுளி யாற்றையும் கொண்டிருந்த கடல்கொண்ட குமரிக்கண்டம் (இலெமூரியா) எனடபடும் நிலப்பரப்பாகும். அப்பகுதியில் தான் முதன்முதலாக மக்கள் தோன்றினர் பின்னர் எண்ணிக்கைப் பெருக்கத்தின்பேரில் மக்கள் நாற்புறங்களிலும் பரவிச்சென்று குடியேறினர். அம் முதல் மக்கள் பேசியது தமிழ் மொழி. இதற்குச் சான்று சங்க இலக்கியங்கள், ஆதலினன்றோ, தமிழ் முதன் மொழி; ஒப்புயர்வற்ற தனி மொழி எனப் படுகிறது இஃது யான் மட்டும் கூறவில்லை, ஏகல் கீத், முதலிய ஆராய்ச்சியாளாகளின் முடிவாய கூற்றுமாகும். இவ்வாற்றான், மொழித் தோன்றலின் முதன்மையும் தமிழிற்கே உரியனவாயத் தனிச்சிறப்புக்களாகும்.

தமிழ் மொழிக்கு அகரம் என்ற நான்கு எழுத்துக்களுமே மூல எழுத்துக்களாகும். இந்நான்கில் மூன்று இயற்கையொலியைக்கொண்ட எழுத்துக்கள். வாயைத் திறந்தவுடன் இயல்பாக ஏற்படும் முதல் ஒலி 'அ'. ஆகவேதான் அ' என்ற எழுத்து இயற்கை ஒலியைக் கொண்டது எனப்பட்டது. பிறவும் இதே போலாம். ஆதலால் தமிழ் இயற்கை மொழி; உயிர் மொழியாகத் திகழும் தனியின மொழி. ஆதலி

னன்றே, தெய்வப் புலமைத் திருவள்ளுவர் ''அகரமுதல எழுத்தெல்லாம்'' என்று அறுதியிட்டு உறுதிமொழியாக உரைத்தனா. சுந்தரரும் ''அகர முதல எழுத்தாகி நின்ருய்'' என்றும், சிவஞான முனிவரும் சோமேசர் முதுமொழி வெண்பாவில் ''அகா முதல எழுத்தெலாம்'' என்றும் கூறிப்போந்தனர்.

தமிழானது முதன்மொழி, உயிர்மொழியாய் திகழும் தொன்மொழி மட்டுமன்று; தனித்தியங்கும் தனிமொழியுமாம். மக்கள் தொடர்பால், பலமொழியாளரின் கூட்டுறவால் ஒரு மொழிச் சொற்கள் மற்றைமொழிகளில் கலக்கக்கூடும். அம்முறையான், ஆரியர்களின் தொடர்பால் வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்து வழங்கி வருகின்றன. இதைக்கொண்டு வடமொழியின்றித் தமிழ் முதலிய மொழிகள் இயங்கா எனக் கூற முன் வருகின்றனர் ஒரு சிலர். தக்க தமிழ் சொற்கள் இருந்தும் வேண்டுமென்றே சிலர் வடமொழிச் சொற்களைத் தமிழில் ஆளுகின்றனர் என்பதை அவர்கள் அறியவில்லை போலும்! சான்ருகக் கூறின், ''மொழி'' என்ற இனிய தீந்தமிழ் சொல்லிற்குப் பதிலாகப் ''பாஷை'' என்ற சொல்லை வழங்குகின்றனர் சிலா (டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் உள்பட) ''தண்ணீர்'' என்ற சொல்லிருந்தும் நீரை குறிப்பிட ஜலம் என்ற வடமொழிச் சொல்லைப் பயன் படுத்துகின்றனர். இன்ன பிற இதுபற்றிக் கால்டுவேலர் என்ற மொழி நூல் வல்லார் பின்வருமாறு ஆஙகிலத்தில் கூறியுள்ளார் :—

''தமிழ்மொழி விரும்பினல் தான் ஆளுகின்ற வடமொழிச் சொற்களை முற்றிலும் அகற்றிவிட்டுத் தனித்தியங்குமென்பதன்றி நன்று தழைக்கவுந் தழைக்கும். ...பொதுவாக, இன்றியமையாதவை என்ற காரணத்தானன்றி மற்றையோரால் பாராட்டப்பட வேண்டும் என்ற தப்பெண்ணத்தினுற் சிலர் வடமொழிச் சொற்களை ஆளுகின்றனர்.'' கால்டுவேலர் கூற்று கற்பனையின் பாற்பட்டதன்று; ஆராய்ச்சியின் விளைவாய கருத்தாகும். மும்மொழிப்புலவர் மறைமலையடிகளாரும் தமிழ்மொழி தனித்தியங்கும் என்பதை நிலைநாட்டியுள்ளார்.

தமிழ் ஒட்டியற் பண்புடைய சொற்கள் நிரம்பியது; அசை அசையாக எளிதில் உச்சரிக்கக் கூடிய சொற்கள் மலிந்தது; பகுதி இன்னதென்று எளிதில் அறியக் கூடிய புணர்ச்சி வகையை யுடையது. ஆதலின், அஃது சீரும் சிறப்புமுடைய சீரிய மொழியென்று அறிஞர்கள் கருதி வருகின்றனர். தமிழ்மொழி தோன்றிப் பலகாலம் ஆயினும் தொன்றுதொட்டே இலக்கண இலக்கிய நிலைகளைப் பெற்று விட்டமையான் தமிழ்மொழி தன்சொற்களின் பழைய வடிவங்களை இன்றும் பெற்றிருக்கிறது; அன்று முதல் இன்றுவரை தன்னிலை யழியாது கட்டிளமையோடு திகழ்கிறது.

பலமொழிகளைத் தோற்றுவித்த தனிப்பெருமையும் தமிழிற்குண்டு. மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகள் தமிழ் மொழியினின்றும் தோன்றிய வழிமொழிகள் என்பதை மொழிநூல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். தமிழ்த்தாய் பல குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்; ஒன்று பலவாயின. ஆனல், நம்தாயின் இளமை குன்றவில்லை. என்னே! நம் தாய்மொழியின் தனிச்சிறப்பு! என்னே! நம் அன்னையின் நிலையாய இளமைப் பொலிவு! தமிழின் கன்னித்தன்மையைக் குறித்தன்றே, பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள், 'கன்னடமுங்களிதெலுங்குங் கவின்மலையா

ளமுந் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும், ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து. சிதையாவுன், சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துதுமே" எனப்பாடினர்.

மேற்கூறிய சிறப்புகளன்றி மற்றைமொழிகளில்இல்லாத தனிச் சிறப்புகள் இன்னும் பல உண்டு தமிழிற்கு. அவற்றில் சில கூறுதும். எழுத்துக்களை எடுத்துக் கொள்வோமாயின் ழ. ற என்ற எழுத்துக்கள் தமிழ் மொழி ஒன்றில் தான் உள்ளன; வேறுமொழிகளில் காண்டால் அரிது. திணைப்பாகுபாடுகள், காலப்பாகுபாடுகள், பால் வகுப்புகள், அகம் புறம் என்ற பொருட்பிரிவுகள், முதலியன தமிழ் மொழியில் சிறப்பாக அமைந்துள்ளன.

தமிழ்மொழியானது ஆரிய வேத மொழியிலும் அதன் வழிதோன்றிய பல ஐரோப்பிய மொழிகளிலும் கலந்துள்ளதென்று கேம்பிரிட்சுப் பல்கலைக்கழக வடமொழிப் பேராசிரியர் ராப்சன் என்பவர் கூறுகிறார். மேலும், ள - ண - ட - ச முதலிய ஒலிகள் தமிழினின்றும் ஆரியத்திற்குப் போனவை என்றும் அவர் கூறுகிறார்.

வினைச்சொல்லை வாக்கியத்தின் இறுதியில் வைத்து முடிக்கும் பெற்றியை வடமொழி தமிழினின்றும் பெற்றதென்று எட்கின்சு என்பவர் மொழிந்துள்ளார். தற்காலச் சமக்கிருத ஐகார ஔகார உச்சரிப்பிற்காக வடமொழி, தமிழ்மொழிக்குக் கடன்பட்டதென்று மொழிநூற் கலையாசிரியர் தரப்பேரிவாலா கூறியுள்ளார்.

பாண்டி நாட்டிலிருந்து எகிப்து நாட்டில் குடியேறிய எகிப்தியர் மொழியும் நாகரிகமும் தமிழர் நாகரிகத்தின் வழித்தானது என்பது கர்னல் ஆல்கரட் என்பாரின் ஆராய்ச்சியின் முடிவு.

முடிவாகக் கூறின், மொழிகள் பலவற்றிற்கும் தலையாய முதன் மொழி தமிழ்மொழி; அதன் வேர்ச் சொற்கள் (Root Words) எல்லா மொழிகளிலும் நிறைந்து இருக்கின்றன. இஃது இதுகாறும் ஆராய்ச்சியாளர்கள் பலர் ஆராய்ந்து முடிவிற்கு வந்ததாகும்.

தமிழ் மகனே! நின் நிலையை யுணர்ந்து தலைநிமிர்ந்து நில். உலக மொழிகளுக்கே தாயாய நின் தமிழ் மொழியின் பெற்றியை நினைந்து பார்! அதன் உயர்வை உன்னிப் பார்! அதன் ஏற்றத்தை எண்ணிப் பார்! சீரும் சிறப்புமிக்க சிறந்த மொழியைத் தாய்மொழியாக வாய்க்கப் பெற்ற பெற்றியைப்-பெற்ற தமிழர் தன் மொழியை இன்று போற்றுகின்றனரா? நினைத்துபார்! பார்!! பார்!!! அன்னிய பெண் ஒருத்தி நின் தாயினிடத்தைக் கொள்ளை கொள்வதை நின் கண்களால் கண்டும் வாளா இருப்பதேன்? நின்மொழியின் வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் எம்மொழியையும் தட்டிக்தழிக்கத் தயங்கமாட்டேன் என்று மடிகட்டிமுந்து நின் மொழியைக் காப்பாற்ற. தெருவெலாம் தேனினுமினிய தமிழ் மொழியின் நறுமணம் கமழச் செய். இதைச் செய்; செய்தால்தான் நமக்கு வாழ்வு.

வாழ்க தமிழ் மொழி!

வளர்க தமிழ் நெறி!!

> மொழிப்பற்று அற்ற மக்கள் வாழ்ந்து செழித்ததாக வரலாற்றில் இல்லை.
>
> —திரு. வி.

5. கடிகை முத்துப் புலவர்

(எட்டயபுரம் முத்துராம கிருஷ்ணன்)

★ (முன் இதழ் தொடர்ச்சி)

அப்போது இளசையில்நாகூர் முத்துப்புலவர் பெத்தணன் தளவாய் ஆகியோர்கள் இருக்கிறார்கள். மன்னர்சபை கூட்டி தமிழ் ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள்.

கடிகையார் இல்லாத சபை சோபிதம் இருக்கவில்லை. இதை மன்னரும் உணர்ந்தார். அவர் தான் சிலேடையாகப் பேசுவதிலும் சமத்காரமாக கவிதை புனைவதிலும் வல்லுநர். எனவே அவர் வரவு ஆவலுடன் எதிர்பார்க்கப் படுகிறது.

கடிகையார் அரச அவைக்கு வருகிறார். நாடோடிக் கவிஞர் ஒருவர் புதிதாக இருப்பதையும் பார்க்கிறார்.

அரச சபையில் அந்நியப் புலவர். இதற்கு முன்பு காணப் படாத ஒரு புதுமுகம் அங்கு காணப்படுகிறது. அதற்காக அவர் அஞ்சவில்லை. அவரது பாடல்தான் கடிகையாரை கடுஞ் சினம் கொள்ளச் செய்தது.

சீதக்காதியின் பெருமையைப் பாடுகிறார் புதிய புலவர். பாடலைப் பார்க்கலாம். ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிக்கும் கார்தட்டிய பஞ்சகாலத்திலே யார் தட்டினும் தட்டாமல் — மார்தட்டிய மன்னு சீதக்காதிவரோரையனே.

எட்டயபுரத்தில் மட்டுமென்ன அச்சமயம் தமிழ் நாட்டிலே மழைக்கும் மகிழ்ச்சிக்கும் பஞ்சமேஇல்லை. என்றாலும் சீதக்காதியின் பெருமை அளக்க அவர் கூறிய பாடல் கண்ட கடிகையார் பதில் பாட்டு பாடுகிறார். சற்று காரமாக.

நாம், மூன்று சங்கம் இருந்து தான் தமிழை மதுரை மாநகர் வளர்த்தது என்று அறிகிறோம். இது உண்மையுங்கூட.

அதேபோல் எட்டயபுரம் தமிழை வளர்த்த வளர்க்கின்ற சங்கம் அதை அவர் அறியக்கூட வில்லை என்ற சினம் மேலீட்டால் பாடுகிறார். சிங்கம் இருந்த இடம் பங்கம் செய்யப்பட்டிருக்கிறது. அவனவன் இட்டதே சட்டம் எனவரம்பின்றிச் செல்கிறது என்று கூறுகிறார்.

சிங்கமிருந்து ஜெயஸ் தம்பம் நாட்டுகின்ற
சங்கமெனும் எட்டபுரந்தனிலே – எட்டா
குமார எட்டா யான் இல்லாத துபயல்கள்
இட்டது சட்ட மாச்சுதே.

அதன்பின் புதிய புலவருடன் மன்னரும் மற்றவர்களும் முகமன் விசாரித்துப் பிரிந்தனர்.

புலவரின் வழக்கப் பிரகாரம். கடிகையாருக்கு கையில் சற்று பணக்குறைவு. மன்னரிடம் நேரில் கூறவும் அச்சம். ஏன் நாணம் என்றே கூறலாம்.

அதனால் அவரது நண்பர் சோலையைக் காலையில் கண்டு பேசினர். அவரும் ஆவன செய்வதாக வாக்குக்கொடுத்தார். என்றாலும் தாங்கள் தங்கள் நிலையை ஒரு துண்டுத்தாளில் எழுதித் தாருங்களேளன்றார். அவர் மன்னரின் அடப்பக்காரர் என்றதினல்.

கடிகையாரைப் போல் சோலை என்பவரும் படித்தவர். அவர் இவருக்கு உதவவிரும்பியது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இனி அவர் எழுதித்தந்த சீட்டுக் கவியைப் பார்க்கலாம்.

கடிகையார் மூலையில் வாடுகின்ற வாட்டத்தை சோலை அதிபருக்குக் கூறுகிறார் கவிதை வாயிலாக.

சோலை அழகா இனிய சொல் லழகா
மாலை அழகா மதிபோல் முகத் தழகா
மூலையிலே நானிருந்து வாடுகிறேன் –
எங்கோன்
வெங்கடேஸ்வர எட்ட மதாணிகருக்கு நீ
எடுத்துச் சொல்.

இதனைக் கண்ட அரசர் கவிஞருக்கு வேண்டிய உதவிகள் செய்தார்கள்.

கடிகையார் ஒரு சமயம் தன் பழைய துணியைத் துவைத்துக் கொண்டிருந்தார் வீட்டில். அரசர் புலவரை உடனே அழைத்து வரும்படி ஆள் அனுப்பினர். சென்றவன் வேலைக்காரன் முத்தையன் என்ற பெயருடையோன். சற்று வாயாடி துடுக்காகப் பேசும் துர்க்குணம் பிடித்தவன்.

அவன் வந்த சமயம் புலவர் மேற்கண்டபடி துணி துவைத்துக் கொண்டிருக்கிறார். முத்தையன் 'புலவர் அய்யா! துணி துவைப்பதால் அது கிழிந்து போகுமோ அல்லது பறந்து போகுமா ஏன் இவ்வளவு அறை அறைகிறீர்கள்' என்று கேட்டான்.

கவிஞர் அவனுக்கு சரியான பாடம் கற்பிக்க எண்ணினர். அதற்கு அவர் பதில் கூறும் முறை சற்று வசையாக உள்ளது என்றாலும் கவிதை நயத்தில் நாம் அதை அனுபவித்துத் தானே தீரவேண்டும்.

அப்பில் நனைத்து அறவே
பழந்துணியைத் தப்பினல்
நம்மைவிட்டுதப் பாதோ. - செப்பக் கேள்
ஆனாலும் கந்தைஅது வும்பழந்துணி
தான்
போனாலும் மயிர் போச்சுப்போ.

இதைக் கேட்டதும் வாயடைத்துப் போனுன் வாயாடி. வந்த வழி திரும்பிச் சென்றுன். அதன் பின் புலவரும் புவி அரசனிடம் சென்று கவிகள் பாடித் திரும்பினுர்.

அன்ஞெருநாள் புலவர் தனிமையாக உட்கார்ந்திருந்தார். கவிதைபற்றி சில சந்தேக விளக்கம் கேட்பதற்காக நாகூர் முத்துப் புலவர் அவரது இல்லம் சென்றுர்.

வேலைக்காரர்கள் காய்கறிகள் தானியவகைகள் முதலியன சேகரம் செய்து கடிகையார் வீட்டில் வைத்தனர். இதை நாகூர் அவர்கள் கூர்ந்து கவனித்தார். என்ன வேலையாட்கள் விரைவாக வேலைகள் செய்த வண்ணமாக இருக்கிறுர்களே என வினவினுர் வினயமாக.

ஓ! அதுவா? தலைவிதி வசம் என்றுர். நாகூரார் திகைத்தார். அப்படி என்ன காரியம் என்று. சற்று யோசனை செய்து பார்த்தார் என்றுலும் புலனுகவில்லை. பின்பு கடிகையார் சாந்தமாக புலவரே! இன்று உமக்கு இங்கு விருந்துண்டு. இன்று என தலைவி, திவசம் என்றுர் சிலேடையைப் பிரித்து.

நகைச்சுவை மன்னராகவே கடிகையார் விளங்கினுர். சாதாரண காலத்தில் மட்டுமென்ன மரணத்தறுவாயிலும்கூட அவரது நகைச்சுவை அவரைவிட்டு அகலவில்லை.

நோய் அதிகமாகியது. இனி பிழைக்கவைக்க வழியில்லை என வைத்தியர் நம்பினுர். என்றுலும் அவர் ஒரு சோதனை செய்து பார்க்க விரும்பினுர். பால் கசந்தால் இறக்கும் தருவாய் என அர்த்தம். அதனை செய்தனர்.

ஒரு துணியில் பாலை நனைத்து அவரது வாயில் ஊற்றினர். அப்போது கடிகையார் "பாலும் கசக்கவில்லை. துணியும் கசக்கவில்லை" என்று கூறினுர். அப்போதுதான் வைத்தியர் பார்த்தார் துணி கசக்காமல் அழுக்கடைந்து இருப்பதை.

சரி! இனி கடிகையார் இம்மண்ணுலகைவிட்டுச் சென்று விடுவார் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டது. பிள்ளைகள் இருவரும் ஏங்கி உள்ளம் உடைந்து நின்றனர். இதைக் கண்ட கடிகையார். "என் அப்பா கலங்குகிறுய்? ஒரு அப்பன் போனுல் என்ன உங்களைக் காப்பாற்ற எட்டப்பன் இருக்கிறுர்" என்றுர் கருத்தாக.

கடிகையார் மரணமானுர். மறைந்தாலும் அவரது நினைவும் திறனும் மறக்காது. மறக்கவும் முடியாது தமிழகம். வாழ்க அவர் நாமம் — வளர்க அவர் கவிதை நயம்!

★

பேரறிஞர் ஷா!

(ந. சிவப்பிரகாசம், தஞ்சை.)

★ (முன் இதழ்த் தொடர்ச்சி)

சீறிவந்த சீசர் - கிள்ளை மொழி கிளியோ பெத்ரா — இவர்களை இணைத்து இணையில்லா இலக்கியத்தை நாடக உருவிலே நடமாட வைத்து இருப்பது நகைச்சுவையை மட்டுந்தானு தருகிறது. அந்த நூற்றுண்டுகளிலே நைல்நதி நாகரிகத்தையும் நல்லதோர் முறையிலே எடுத்துக் காட்டத்தான் செய்கிறது. "ஷா"வின் படைப்பிலேயுள்ள "சீடரின்" அன்பின் அடிமையாக வைத்து காட்டப்படுகிறதே யன்றி ஷேக்ஸ்பியரின் அந்தோனிபோல 'அழகின் அடிமை நான்' என்று அவளிடம் 'அழகு பிச்சை' கேட்கும் அளவுக்கு இல்லை.

நைல்நதி நங்கையின் நகைச்சுவையான பேச்சும் - சீறிவர்த சீசர் அந்த சிங்காரியின் சிரிப்பிலேதன் சிந்தனையை சிதறவிடாமல் முயற்சி எடுத்துக் கொள்வது - பிரிவுரை கூறும்போது "விருது பெற்ற வீரன் ஒருவனை ரோமா புரியிலிருந்து பரிசாக அனுப்புகிறேன் உனக்கு" என்று கூறுகிற காட்சியும் கண்ணியமான முறையிலே நாடகத்தை நடத்திச் செல்வதாக இருக்கிறது.

பதினறு ஆண்டு நிறைந்த பாவைதான் அவள். ஆனல் பச்சைக் குழந்தை போலத்தான் பழகுகிருள் முதுமையடைந்த சீசரிடம்.

"முதுமையை மறைக்கத்தானே இந்த முடி, தலையிலே!" - கிளியோ பெத்ராவின் கிண்டல், கிளர்ச்சி கொடுக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. மாவீரனுக்கு மாணவி என்ற முறையிலேதான் பழகியதாக காட்டுகிருர் கண்ணியமான முறையிலே. அவனுடைய அனுபவப் பள்ளிக்கூடத்திலேதான் அனைத்தையும் அறிந்து கொள்வதாக கூறப்படுகிறது. **அழகுக்கு அறிவை அறிமுகப் படுத்தியவன் சீசர் என்ற முறையிலே தான் நாடகமே இருக்கிறது.** "ஆள்வதற்குகூட அறிவைப் பெற்று விட்டேனே"-அப்படி அவன் சீசரின் முன் கூறும்போது தன் மாணவியின் "புத்திசாலித் தனத்துக்கு" எதைப் பரிசாக கொடுப்பது? என்று தெரியவில்லை அவனுக்கு.

"விருது பெற்ற வீரனை அனுப்புகிறேன் உன்னுடன் விளையாடுவதற்கு" என்று கூறுவது வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

"வெடு வெட்டி வீரர்கள்தானே! வீழ்ந்து செத்தால்தான் என்னவாம்" — அழகையே அணைத்துக் கொண்டு இருப்பவளின் அலட்சியமான பேச்சுதான் இது.

"என் வீரர்களின் வாள் ஏந்தும் கைகளைவிட வீணை ஏந்தும் உன் கைகள் எந்த விதத்திலும் உயர்ந்தவை

யல்ல'' — பல்லாயிரவருக்கு படைத் தலைவர் என்ற முறையிலேதான் அப்படி கூறுகிறான். கூறுகிறானா? — கூறும்படியான நிலையில் இருக்கிறான்!

அலக்சாண்டிரியாவின் அரண்மனையிலே சீசர் புகுந்ததும் அரியணையிலே அமர்ந்து இருந்த 'அப்பாவி' அலறி அடித்துக்கொண்டு எழுந்து இருக்கும்போது "உன்னுடைய இருப்பிடத்திலேயே உட்கார்ந்து இரு அப்பா"-என்று சீசர் கூறுவது. இல்லை — கூறவைப்பது பரிகாசச் செயலுடன் ஒருவனுடைய பெருந்தன்மையையும் காட்டுவதாகத்தான் இருக்கிறது.

"சீசரும் கிளியோ பெத்ராவும்'-என்ற நாடகம் சிரிப்பையும் கிண்டல் மொழிகளையுமட்டும் கொண்டு இல்லை, இரண்டு நாடுகளின் நாகரிகத்தையும் நமக்கு காட்டுவதாக அமைந்துள்ளது.

"மருத்துவரின் மனக்குழப்பம்'' (Doctor's Dilemma) - மருத்துவ உலகத்தை ஒருவிதத்திலே மருள வைத்த நாடகந்தான் அது. மருத்துவர்கள் எல்லாம் **அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கொலையாளிகள்** தானே (Licensed Murderers) என்று கிண்டலாக எழுதுகிறார் பேராசிரியர். உடலைவிட்டுப் பிரியும் உயிரை தங்கள் உட்சட்டைப் பைக்குள் வைத்திருப்பதாகத்தான் வைத்தியர்கள் எண்ணுகிறார்கள் என்பதை எளனப் படுத்திவிடுகிறார். 'கலைஞனுக்கு காசநோய். கலைவாழ வேண்டுமானால் காப்பாற்று அவனை' என்று கதறுகிறாள் ஒரு காரிகை. முதலிலே முடுக்காக இருந்த மருத்துவர் பிறகு அக்கறை காட்டுகிறார். அவதிப்படும் அந்த நோயாளியிடம் கலைஞனை கல்லறையில் சேர்ப்பதுதான் அவரது தொண்டாக முடிகிறது. மருத்துவர்களின் மனப்பண்பை அப்படியே "மருத்துவரின் மனக்குழப்பம்'' என்ற அந்த நாடகத்திலே எடுத்துக்காட்டி விடுகிறார்.

"கல்யாணத்திற்குப் பிறகு'' (Getting Married) என்பதிலே கல்யாணம்! 'காண்டராக்ட்' நிலைக்குக்கு வந்துவிட்டதை கண்டிக்கிறார். விவாகம் — அதை ஒரு விவாதத்துக்குரிய பிரச்சினையாக ஆக்குகிறார். விவாதம், விபரீதம் கலந்ததாக இருக்கலாம் விஷயம் புரியாதவர்களுக்கு. ஆனால் விவாதத்துக்குரிய விஷயத்திலே விளையாட்டை கலந்து இருப்பது கல்யாணம் என்ற கட்டுப்பாட்டுக்கே களங்கம் விளைவிப்பதாகத்தான் இருக்கிறது என்று எண்ணலாம். சிக்கலான பிரச்சனையை சிரித்துக்கொண்டே தீர்த்து விடலாம் என்பது அவரது தத்துவமாக இருக்கலாம் அல்லவா?

காதல் பாதையிலே காட்டுத்தனமாக செல்லும் காதலர்களுக்கு அபாய அறிவிப்பாக இருப்பது "பொருந்தா மணம்'' (Misalli--ance) என்ற நாடகம் Philanderer என்ற நாடகத்திலே காதலை காபி குடிக்கும் நிலைக்கு —டைத்தெருவுக்கு கொண்டுவரும் வியாபாரத்தை விறுவிறுப்பான நடையிலேயே கையாண்டி செய்து விடுகிறார்.

பொதுவாக வாழ்க்கையின் வழி காட்டி என்ற வகையிலே வழுக்கி விழுந்த — வழுக்கி விழ நேர்ந்த வனிதையருக்காக வாதாடும் வக்கீலாக இருக்கிறார் பேறிஞர். விபசாரம்! வீதியிலே விலையாகும் நிலைக்கு வந்ததின் காரணம் அது குடும்பக் குடியரசிலே ஏற்பட்ட

கோளாறின் குழந்தையாகி விட்டதால் தான் என்று கூறுகிறார். தவறுகள் தரித்திரம் தாயாக இருப்பதினால்தான் தவழ்கின்றன - தாடிக்காரரின் தத்துவம் இந்த விதத்தில்தான் தவழ்ந்து செல்கிறது.

(Man and Super Man) "மனிதனும், மனிதனுக்கு அப்பாற் பட்டவனும்" — என்ற நாடகத்திலே தத்துவமே தாண்டவம் செய்வதாகத் தான் இருக்கிறது.

பேராசிரியனின் உரை நடையோ உள்ளத்தைத் தொடுவது மட்டுமல்ல- தொட்டு ஒரு குலுக்குக் குலுக்குவதாகவே இருக்கிறது. "அனைவர்க்கும் அரசியல்" (Everybody's Political) என்ற உரைநடை 'அரசியல் அலைகள்' — பொருளாதாரப் புயல்கள் - சமுதாயச் சுழல்கள் - இந்த மூன்றையும் முறுக்கி பின்னப்பட்ட அறிவியல் நூல் அது. அதிலேதான் தன் தத்துவத்தை தவழ்ந்திடும் குழந்தையாக நடமாட விடுகிறார். நிலைத்த சமதர்மத்தை நிதானத்துடன் கொண்டுவர வேண்டியதை வற்புறுத்துகிறார். (Fabian Socialisam).

பேரறிஞன் பெர்னாட்ஷா 1848-லே மதிப்புக்குரிய மனையாட்டியைப் பெற்று 1943-வரை வாழ்க்கைப் பூஞ்சோலையில் உலவியும் ஒருவித குழந்தைகளையும் மலர்க் குவியலாகப் பெறவில்லை. அவர் தன் இலக்கியச் சோலையில் படைத்த ஐம்பதுக்கு மேற்பட்ட குழந்தைகள் தான் இன்று நமக்கு இருக்கின்றன. குழந்தைகள் சாதிக்க முடியாதவைகளை அவரது "கருத்துக் குழந்தைகள்" சாதிக்கமுடியும் என்ற எண்ணத்தினால்தான் தனக்கு 'வாரிசாக' குழந்தைகளைப் படைத்துக் கொள்ளவில்லை போலும்!

அவரது வரலாறு — 'வேதனை'யையால் தீட்டபடவேண்டிய ஒன்று. பதினாலும் ஆண்டு, பல்கலைக் கழகப் படிப்புக்கு செல்லவில்லை அவர். உலகமே பல்கலைக் கழகம் என்ற எண்ணம் போலும் அவருக்கு. ஆரம்ப நிலையிலே ஓர் அலுவலகத்திலே ஒரு 'பேனா ஒட்டி'யாகத்தான் இருந்து வந்தார். "இந்த உலகிலே நான் ஒரு தடவைதான் வாழமுடியும். அந்த வாழ்விலே நான் ஒரு பேனா போட்டியாக இருக்க விரும்பவில்லை கட்டுத் திட்டத்துக்கு உட்பட்ட நிலையிலே" - என்று கூறிவிட்டு வெளியேறினார் அந்த நாளிலே — அந்த நாளிலே என்றால், ஏழ்மையே எழுத்துலகமாக இருந்த காலத்திலே என்று கூறவேண்டும்.

ஏழ்மையே எழுதுகோல்! தன்னம்பிக்கையே தட்டிக்கொடுக்கும் உணர்ச்சி. காகிதந்தான் பொறுமையின் சிதரல்கள்! தளராமல் எழுதினான்! எழுதினான்!! எழுதித்தள்ளினான்!!! ஒரு மாதம் இரண்டு மாதம் அல்ல- ஒன்பது ஆண்டுகள்! எழுதிக் குவித்த எண்ணக் குழம்புகள் எல்லாம் வெறும் எழுத்துக் கூட்டங்களாகத் தான் கருதப்பட்டன விளம்பரத்தையே விரும்பும் அச்சுக்கூடங்களில் எல்லாம். அவன் அலுக்காமல் சகிப்புத் தன்மையையே சகோதரியாகக் கொண்டு எழுதிக் குவித்ததற்கு எப்படியோ ஆறு பவுன் கிடைத்து விட்டது! ஒன்பது ஆண்டின் ஓயாத உழைப்புக்கு ஒப்பற்ற கூலிதானே அது! ஒரு காலத்திலே குப்பையிலே ஒதுக்கித்தள்ளப்பட்ட குவியல்கள்! பிற்காலத்திலே ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு நூறு பவுன் ஒப்பந்தம் பேசும் அளவுக்கு அச்சுக்கூடங்கள் எல்லாம் அடித்துப் பிடித்துக் கொண்டு வந்தன.

தொண்ணூற்றுநான்கு ஆண்டுகள் இந்த தொல்லை நிறைந்த உலகிலே வாழ்ந்து இருக்கிறார். அயர்லாந்தே அயர்ந்து இருக்கும்போது மட்டுமல்ல — அகில உலகமே அறியாமை இருளிலே இருந்தபோதுதான் அவர் பிறந்தார். **அவர் பிறந்தார் இறப்பதற்காக மட்டுமல்ல — பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே இணையில்லாத இலக்கிய உலகை ஏற்படுத்திவிட்டு போவதற்குத்தான்.** ஷேக்ஸ்பியருக்கு பிறகு.........யார் இருக்கிறார்கள்? என்று இலக்கிய உலகமே வெகு நாட்களாக ஏங்கிக் கொண்டு இருந்த போது 'இதோ நான் இருக்கிறேனே' என்று "ஷா" அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டார். இலக்கிய உலகிலே இடம் பிடித்துக் கொண்டார் என்றால் 'இலக்கிய இதயங்களிடையே' ஒரு இலயக்கிய வேந்தன் என்ற முறையிலே இடத்தைப் பிடித்துக்கொண்டார் என்றுதான் கூறவேண்டும். வெறும் எழுத்துக் கூட்டங்களை குவித்து ஏமாளிகளின் எண்ணக் கோட்டைகளை எட்டிப்பிடிக்கவில்லை அவர். எண்ணக் குழம்புகளை எஃகு கம்பிகளாக அடித்து அவைகளை எழுந்து நடமாடவைத்தார் நாடகத்திலே. **"நடமாடும் நந்தவனங்கள்"தான் அவரது நாடகங்கள்** நாற்காலிகளிலே உட்கார்ந்து கொண்டு பார்க்கும் அத்தனை இதயங்களின் இருப்பிடத்தை மட்டுமல்ல அவர் பிடித்தது; அவரது "புத்தகப் பூங்காவிலே" புகுந்து உலவுகின்ற நம்முடைய இதயங்களிலே யுந்தான் இடம் பிடித்துக் கொண்டார்.

பூவையர் நிறைந்த பூந்தோட்டத்திலே தள்ளுவதைவிட பெர்னாட் ஷாவின் புன்னகை பூந்தோட்டத்திலே என்னைத் தள்ளினால்......... அவனுடைய இலக்கிய பூஞ்சோலையில் உலவிடும்போது கற்பனை கட்டுப்பாடு அற்றுத்தான் போகும்!

அந்தோ! **இரண்டு நூற்றாண்டுகளையும் இணைத்து, பிணைத்துக்கொண்டு இருந்த இலக்கிய வேந்தன் இன்று இல்லை! வசந்த காலம் வந்துவிட்டுப் போனதுகூட தெரியவில்லையே! இலக்கிய உலகிலே இலையுதிர் காலம் தான் வந்துவிட்டதா? இல்லை!**

இறந்தது இலக்கிய வேந்தன்தான்! ஆனால், இருக்கிறது இலக்கியச் சோலை!! அதோ இலக்கியச்சோலையிலே இன்னிசைக்குயில் அப்படித் தான் கூறுகிறது!

★

கடற்கரையில் கவிஞர் குடும்பம்!

கவிஞர்: "அலைகடலே! ஆனந்தமாக இசை பாடு! ஆழ் கடலே! இன்பமாக மரக்கலம் செல்ல வழி விடு! கருங்கடல் அலைகளே! ஒன்றை ஒன்று கட்டி முத்தமிட்டு, கரைமீது புரண்டு, உருண்டு, மீண்டும், மீண்டும் .... "

கவிஞர் மனைவி: "என்னங்க! அதிசயமாயிருக்கு! நீங்க சொல்லுறபடியே அலைகளும் செய்யுதே!"

—தன. இராசாமணி

****

சித்த வைத்திய

ஆராய்ச்சிக் கழகம்

****

★

இச்சங்கம் சென்னைக்கடுத்த தின்னனூர் தாசர்புரத்தில் நிருவப்பட்டிருக்கிறது. அதன் சார்பாக ஒரு சித்த வைத்திய சாலை நடைபெற்று வருகிறது. அதில் சித்த வைத்திய நூல் நிலையம் ஒன்று இப்பொழுது ஆரம்பித்து வருகிறோம். இதற்காக பண்டை காலத்து சித்தர் நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கைப்பிரதிகள் முதலியன சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதைகாணும் தமிழ் அன்பர்களிடம் புதிய பழைய நூல்கள் முதலியன இருப்பின், இலவசமாக அனுப்பி வைக்கப் பிரியமுள்ளவர்கள் தெரியப்படுத்தினால் அதைப்பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்படும். அப்படியில்லாமல், விலைக்கு விற்கயிருந்தாலும் அதைத் தெரியப்படுத்தினால் விலை கொடுத்து நமது நூல் நிலையத்திற்கு வாங்கி இவ்விடத்தில் வைக்கப்படும். சித்த வைத்தியர்கள் வைத்திய ஆராய்ச்சி செய்வதற்கு இது ஒரு தகுந்த இடமாகும். இவ்விடத்தில் சித்த வைத்திய பெரு மருந்துகள் செய்யவும், வேண்டிய உதவியும் சௌகரியங்களும் ஏற்படுத்தப்படும்.

தாசர் சித்த நூல் நிலையம் :- சில காலமாக ஆரம்பிக்கப்பட்டு பற்பல இடங்களிலிருந்து பல காவியங்களும், கிடைக்கக் கூடிய சித்த வைத்திய நூல்கள் முதலியன தமிழிலும், ஆங்கிலத்திலும், கொஞ்சங் கொஞ்சமாக சேகரித்து வைக்கிறோம். இதற்கு சித்த வைத்தியர்களும் தமிழ் அன்பர்களும், புத்தகவுதவியோ, பொருளுதவியோ, வேறெந்த விதத்திலும் இந்த நூல் நிலையம் சித்த வைத்திய வளர்ச்சிக்குப் பயன்படுமாறு செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்நூல் நிலையம் சித்த வைத்திய ஆராச்சியாளருக்கும், வைத்தியர்களுக்கும் புதிய விதமாகப் பயன்பட வேண்டுமென்பது நம்முடைய நோக்கம். இதைப்படித்து கவலையற்றிராமல், நம் நாட்டுக் கலைகளில் சிறந்ததாகிய சித்த வைத்தியங்களை முன்னேற்ற மடைய வழி இதன் மூலமிருப்பதால் இந்த நூல் நிலையம் எல்லோருக்கும் பயன்படுமாறு உதவி செய்யவும், நம்முடைய தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலும் சந்து பொந்துகளிலும், அநேக அரிய நூல்கள், செல்லுக்கும், கரையானுக்கும் இரையாகிப் பாழய்ப் போவதை நம்மில் அநேகர் கண்டிருக்கலாம். அப்படிப் போனாலும் போகச்செய்து விடுவாரே யொழிய பலருக்கு உபயோகமாகும்படி

பொது நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் பரந்த நோக்கம் நமது தமிழ் நாட்டினருக்கு இன்னும் உதிக்காதது நமது தமிழ் நாட்டின் தாழ்ந்த நிலைக்கு ஒரு முக்கிய காரணமாகும்: வடநாட்டார் ஆயுர் வேதம் போன்ற தங்களுடைய கலை களைப் பல துறைகளிலும் ஓங்கச் செய்வதற்கு வேண்டிய முயற்சி இடைவிடாது செய்துவர, நம் முடைய தமிழ் நாட்டவர் நம் முடைய ஒப்பற்ற கலையாகிய தமிழ் சித்த வைத்தியக் கலையை ஓங்கச்செய்ய முன்வராத காரணம் நமது நாட்டில் சுயநலப் பற்றற்ற தேசத்தியாகிகள் அதிகமாய் இல்லாததாலும், அந்நற்குணம் வாய்ந்த சிலருக்குள்ளும், சித்த வைத்தியத்தின் மகிமை, பெருமை, தனிஉயர்வு இதுதானென்று அறிந்து கொள்ளாத காரணத்தினாலேதான். அப்படியிருப்பதற்குக் காரணம், சித்த வைத்தியர்களுக்குள்ளிருக்கும் அறியாமையும், பொறாமையுமேயாம். இத்தீயகுணங்கள் உண்மை சித்த வைத்தியர்களுக்கு சிறிதும் பொருந்தாது.

ஆதலின் இனிமேலாவது தீய குணங்களைக் கைவிட்டு, "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற நேர்வழியைப் பின்பற்றி நமக்கும் நமது நாட்டிற்கும் மேன்மையை உண்டு பண்ணுவோமாக.

(Sd.) H. தேவதாஸ். B. A., L. T.,
M. T. SC.
சித்த வைத்திய ஆராய்ச்சிக் கழகம்,
தாசர்புரம் தின்னனூர் M. S. M.

★

Post Box No. 211 தபால் பெட்டி 211

கியாரண்டியுள்ள நெ. 80, 100 ஜரிகை

கலர் புடவைகள்,

வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள்.

★

—— கிடைக்குமிடம் ——

S. M. S. R. பாலசுந்தரம் செட்டியார்

சொந்தக் கைத்தரி ஜவுளி வியாபாரம்

36, பஞ்சவர்ணசுவாமி கோவில் தெரு

உறையூர் போஸ்டு : : திருச்சிராப்பள்ளி.

இலட்சிய வீரன் லெனின்!

(கரந்தை. க. கணேசன்.)

★

1917-ம் ஆண்டு மார்ச்சு மாதம் இரஷ்ய, சரித்திரத்திலேயே கண்டிராத ஓர் மகத்தான நாள். இரஷ்ய வரலாற்றுச் சுவடியிலே ஒரு பொன்னேடு புகுந்து மிளிர்ந்த நாள். இலட்சிய வீரன் லெனின் கண்ட கனவு நனவாக உருப்பெற்ற நாள். மக்கள் ஆட்சி மலர்ந்த நாள். "மன்னன் என்பான் எதையும் செய்யலாம். அதைக்கேட்க யாருக்கும் உரிமை கிடையாது" என்று மமதையுடன் கொடுங்கோல் ஆட்சி செய்த ஸாரின் மணி மகுடத்தை மண்ணிலே வீழ்த்திய நாள். 'மக்களே எம்மை மன்னிக்கவும்' என்று மண்டலாதிபதிகள் மண்டியிட்டுக் கதறிய நாள். பண ஆதிபத்தியத்தின் பாதாள குகைகள் எல்லாம் பாழாக்கப்பட்ட நாள். மமதை நிறைந்தோரின் மட்டரகமான செயல்களுக்கு முடிவு கட்டிய நாள். உண்மையும், உரிமையும் கொண்ட லெனின் கொள்கைகளைக் கண்டு சிரித்த சீமான்களின் சிரத்தைக் கொய்து, சின்னா பின்னப்படுத்திய நாள். உழைப்பை உரிஞ்சிய உண்மத்தர்களின் வாழ்வு, இனி வளம் பெருது என்பதை உலகுக்கு உணர்த்திய நாள். அத்தகைய புது நாள் புலர்ந்தது இலட்சிய வீரன் லெனின் செய்த மகத்தான சேவையால்.

பாட்டளிகள் பரவசமற்று 'இனிப் பஞ்சமில்லை. பட்டினியில்லை எல்லோரும் சமமென்ப தறிந்தோம்' என்று பண் பாடிக் களித்தனர். உழவன் உள்ளத்திலே உவகை பூத்தது. வீரர்களின் வெந்து நைந்திருந்த உள்ளம் எல்லாம் மகிழ்வால் மலர்ந்தது

காதலர்களின் உள்ளத்திலே பெருவகைததும்பியது. இளைஞர்களது இதயத்திலே இன்பம் நடனம் புரிந்தது அறிஞர்களின் அகத்திலே அறிவு பொங்கி வழிந்தது. ஏன்? இரஷ்யாவின் எம்மருங்கும். எவ்வினத்திலும் களிப்பு, மகிழ்ச்சி, கோலாகலம். இத்தனைக்கும் காரணம் இலட்சியவாதி, இணையற்ற வீரன் லெனின். அத்தகைய அண்ணலை மறக்க முடியுமா? எனவே தான் வாழ்க லெனின்; என்று வாயார வாழ்த்தி மகிழ்ந்தனர் மக்கள்.

உணர்வற்று உறங்கிக் கிடந்தோருக்கெல்லாம் உணர்ச்சி என்னும் வீணையை மீட்டி, உரமேற்றியவர் லெனின். உழைக்கிறேன், உருக்குலைகிறேன் ஆனால் உண்மைப் பயனை பணக்காரன் அடைகிறானே என்று பரிதவித்தோர்க் கெல்லாம் பாதை காட்டி பதப்படுத்தியவர் லெனின், காட்டைக் கழனியாக்கி, மேட்டை வீடாக்கித் தருபவன் ஓட்டைக்குடிசையில் ஒதுங்கி வாழும் வாழ்வை, வளமாக்கியவன் லெனின். உண்டு கொழுத்து உறங்கிக்கிடந்த உலுத்தர்களின் செயல்களை உலகறியச் செய்தவன் லெனின். சிதைந்து கிடந்த சீர்கெட்ட சமுதாயத்தைச் சீர் திருத்தி உருவாக்கிய பெருமை லெனினுக்கே உரியது. லெனின், ஆதிக்க புரியினருக்கு ஓர் அணுகுண்டு. மக்கள் உலகிற்கு ஓர் மகான். தன்மான

வீரர்களுக்கு ஓர் இலட்சியவீரன். நெடுங்காலம் உறக்கத்திலே ஆழ்ந்து கிடந்த. இரஷ்ய மக்களைத்தட்டி எழுப்பி, தன்மான உணர்வு ஊட்டி பொதுவுமை கண்ட பெருமை லெனினுக்கே உடைமை.

லெனின் தன் வாழ்நாள் முழுவதையும் கொடுங்கோன்மையை ஒழித்து, மக்கள் ஆட்சியை, மலரச் செய்யும் மகத்தான பணிக்கே செலவிட்டார். சிறுவர் லெனின் புத்திக் கூர்மையும், துணிவும் படைத்தவர். அவர் பள்ளியில் பயிலும்போது எல்லாப் பாடங்களிலும் முதன்மையைப் பெற்றார். விளையாட்டுப் போட்டியில் இவரை வெல்ல வேறு யாருமிலர். இவ்வாறு தம் பள்ளி வாழ்வில் பலர் புகழுமாறு பல பரிசுகள் பெற்றிருக்கிறார். இளமையிலேயே, சுதந்திரதாகம், உரிமை வேட்கை முதலியன அவரது உடைமையாக அமைந்தது. பணமெனும் பலிபீடத்தில் மக்கள் சமுதாயம் சாய்க்கப்படும் கொடுமையை எதிர்த்து மறப்போர்புரிந்த லெனின் ஒரு பள்ளி ஆசிரியரின் மகன். ஏழ்மையே தோழனை எளிய குடும்பத்தில் பிறந்து தவழ்ந்தவர் லெனின். தந்தை தன் மக்களது அறிவுககண்களைத் திறந்து இன்பத்தில் திளைத்தார். திறந்த கண்களுக்கு ஒளி பெறும் தன்மையை ஊட்டி மகிழ்ந்தார். தனையன் ஏழைகள் எத்தர்களால் ஏமாற்றப்படும் அநீதியை மக்கள் மன்றத்திலே எடுத்துரைத்தார், மக்கள் மகிழ்ந்தனர். மதோன்மத்தர்கள் சீறினர். பள்ளி ஆசிரியனுக்கா இந்த படுபாவி பிறக்க வேண்டுமென்று பிதற்றினர் பித்தர்கள். பாவி நமக்கே உலை வைக்கிறானே என்று பரிதவித்தனர் பாதசாரிகள். அரசாங்கத்தை எதிர்க்க இவன் யார்? என்றனர் ஸாரின் பிரதிநிதிகள். ஆனல் எதற்கும் அஞ்சாது தான் கொண்டகொள்கைப்படியே நடந்து காட்டினர் லெனின். எதிர்ப்பு ஏராளம் வரும் என்று தெரிந்தும் உள்ளத்தின் உரிமை வேட்கையை ஒளிக்காது உரைக்கும் உறுதி உண்மையிலேயே லெனினிடம் அமைந்து கிடந்தது. இல்லை என்றால் கொடுங்கோன்மை உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து வீறுடன் ஆட்சி செலுத்திய அந்நாளிலே அத்தனை துணிவுடன் அவ்வளவுவெளிப்படையாக அதிகாரவர்க்கமென்னும் ஆதிபத்தியக்கோட்டை மீது, மடமட வென வெடிகுண்டுகளை வீசினரே அது நடந்திருக்கக் கூடிய நிகழ்ச்சியா? இரஷ்ய மக்களின் மனத்திலே பொதுவுடமைத் தாகத்தை உண்டாக்கினரே அதுதான் நடக்கக் கூடியதா?

தந்தையை இழந்த லெனினுக்கு அண்ணன் அனுசரணையாக யிருந்தார். ஆனல் அரசாங்கம் அண்ணனைவிட்டுவைக்க வில்லை அரசனைக்கொல்லச் சதி செய்தான் என்று குற்றம் சாற்றி தூக்குக் கயிற்றை முத்தமிடச் செய்தது. வாழ்வின் வழி காட்டியான சகோதரனை இழந்த லெனின் நிர்க்கதியாய் செய்வதறியாது தவித்தார். லெனின் உள்ளத்திலே குமுறல், புயல் எல்லாம் ஏககாலத்திலே சேர்ந்து சதிராடின. தன் வாழ்வில் ஒரே இலட்சியம் கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து, மக்கள் ஆட்சியை மாண்புடன் மாநிலத்தில் விளங்கச் செய்வதே என்று உறுதி பூண்டார். ஆனல் வாழ்வின் நிலையை நிர்ணயிக்க, பல இன்னல்களுக்கிடையே வக்கீல் தொழிலுக்குப் படித்து சட்டப் பரீசையில் தேறினர். தமது இருபதாவது ஆண்டிலேயே நியாயவாதியானர். ஆனல் லெனின் தான் வழக்காடிய பல வற்றில் தோல்வியே கண்டார். அண்ணனின் ஆவியை அநீதியாகக் கவர்ந்த அரசாங்கத்தை அழிக்கவேண்டுமெனற எண்ணம் அவரது மனத்தீயிலே புகைந்து கொண்டேயிருந்தது. மாபெரும் நிகழ்ச்சியாக அவ

ரது மனத்திலே பதிந்து விட்டது. 'பலிக்குப்பலி' என அவரது உதடுகள் உச்சரித்துக்கொண்டே யிருந்தன. அண்ணனைக் கொன்ற அரசாங்கத்தை அழித்தேதீருவேன் என்று சூள் உரைத்து தன் இலட்சியப் பதையில் நடக்க ஆரம்பித்தார் லெனின். சிறு நடைதான். ஆனால் அரசாங்கம் அஞ்சியது. எங்கே ஆட்டம் கண்டு விடுமோ என்று. 1871-ம் ஆண்டில் தொழிலாளிகளின் விடுதலைச் சங்கத்தைத் துவக்கினார். சட்டம் அவரை சதிக்கிடங்கிற்கு அனுப்பியது ஆனால் அஞ்சவில்லை அவர். அவரது நெஞ்சு உரம் இன்னும் நீள ஆரம்பித்தது. "சிறை சித்திரப் பூஞ்சோலை" என்றார்.

தம் காரியங்களைத் தயங்காது நடத்தினார். பாலினால் செய்யப்பட்ட மையினால் இரகசிய முறையில் எழுதி துண்டுப் பிரசுரங்களை தம் நண்பர்களுக்கு அனுப்பி வந்தார். இதை அறிந்த அரசாங்கம் இவனை இப்படியே விட்டு விட்டால், நம் வண்டவாளங்களை வெளியில் வெகு விரைவில் அம்பலப்படுத்தி விடுவான். பிறகு மன்னனை மக்கள் மதிக்க மாட்டார்கள். நம் நல் வாழ்வு நாசமாகி விடும். உல்லாச புரியிலே சல்லாபமாக உலவ முடியாது என அஞ்சி நாடு கடத்தியது நாட்டின் நலிவை மக்களுக்கு ஊட்டிய உத்தமனை. பிறந்து தவழ்ந்து வளர்ந்த பொன்னாட்டிலிருந்து அதிகார வர்க்கத்தால் அடித்து விரட்டப் பட்டார் சைபீரியா பிரதேசத்திற்கு.

லெனின் அங்கே சிலகாலம் வாழ்ந்தார். பின் ஸ்விட்ஸர்லாந்தைத் தமக்கேற்ற இடமாகக் கொண்டு அங்கு வசிக்கலானார். ஆனால் தாய் நாட்டின் நலிவு, அவரது நினைவை விட்டு நீங்கவே இல்லை. இரஷ்யாவின் நலிவை அறியச் செய்ய ஒரு ஏட்டை ஆரம்பித்தார். அந்த ஏட்டிலே குருட்டு நம்பிக்கைகளைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கும், எதனையும் ஆராயும் அறிவுத் திறன் இருக்கும், மடமையை மட்டந்தட்டும் மாண்பிருக்கும், எத்தர்களின் இதயங்களைக்குத்தும் சொல்லம்புகள் ஏராளமாக யிருக்கும். உண்டு கொழுத்திருப்போரின் உள்ளத்தைக்குடையும் குணமிருக்கும். ஒருவன் வாழ, மற்றொருவன் தாழும் நிலைமை ஏன்? என்ற வினா இருக்கும். மக்கள் ஆட்சி நல்லதா? மன்னன் ஆட்சி சிறந்ததா? என்ற கேள்விகளும், கேள்விகளுக்குப் பின் தக்க விடைகளும் அவரது ஏட்டிலே நன்குமிளிரும், சிறப்பாக அவரது ஏடு ஓர் சிறந்த சிந்தனை ஏடு.

1905-ம் ஆண்டு இரஷ்யா, ஜப்பான் போர். இரஷ்யாவிற்கு படு தோல்வி. நாட்டிலே ஒரே குழப்பம். புரட்சி வாடை வீச ஆரம்பித்தது, ஆனால் பலமாக ஒன்றும் நிகழவில்லை தொழிலாளிகளின் பிரதிநிதிகளடங்கிய குழுக்கள் ஏற்பட்டு நாடெங்கும் இக்குழுக்கள் சோவியத்துக்கள் எனப்பட்டன. லெனின் இக்குழுக்களைப் பலப்படுத்தினார். எனினும் 1914-ம் ஆண்டு வரை அவர் ஒன்றும் அதிகம் சாதிக்க இயலவில்லை. இவ்வாண்டிலேயே ஸ்விட்ஸர்லாந்திலிருந்தபடியே இரஷ்யாவில் பத்திரிக்கையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவிகள் புரிந்தார், அப்பத்திரிக்கையே "பிராவ்டா" (உண்மை) என்று பிற்காலத்தில் சிறப்பைப்பெற்றது. இப்பத்திரிகையின் வாயிலாக இரஷ்ய மக்களின் இதயத்திலே உணர்ச்சியை ஊட்டினார், மக்கள் விழித்தனர், கொதித்தனர், விடுதலை இயக்கத்தினர் வீரப் பணிக்கு வீறுகொண்டு எழுந்தனர்' எப்பொழுது,? எப்பொழுது? என்று துடித்தனர். அத்தருணத்தைக் கொண்டு பிராக் என்னுமிடத்தில் தன் அந்தரங்க நண்பர்களைக் கூட்டினார். இரஷ்ய மக்களிடம் புரட்சி விதையைத்தூவ வேண்டி, திட்டமிட்டார். தோழர்கள் இரஷ்யா

வெங்கும் நற்பிரசாரங்கள் செய்து நாட்டு மக்களைக் கண் திறக்குமாறு செய்தனர் இதற்கிடையே உலகப் பெரும்போர் ஆரம்பித்தது. இரஷ்யா போரிலே பங்கு கொண்டு பற்பல இடங்களில் படுதோல்வியுற்றது. தேசமெங்கும் குழப்பம். சமயம் நோக்கி நின்ற லெனின் இரஷ்யாவில் புகுந்தார். பல மேடைகளில் சிம்ம கர்ஜனை செய்தார் இடிக்குரலில் பேசினர். சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினர். சுதந்திர உணர்ச்சியை ஊட்டினர். "மக்களுக்காக அரசாங்கமே தவிர மன்னனுக்காக அல்ல" என்பதை மக்களுக்கு அறிவுறுத்தினர். அரசாங்கத்தை மக்கள் அடையவேண்டிய அவசியத்தையும் விரிவுரை மூலம் விளக்கினர்.

உடனே மக்கள் கொதித்தனர். எங்கும் ஒரே புரட்சிப்புயல். விளைவு மன்னன் மணிமகுடம் மண்ணிலே உருண்டது. சீமான்கள் சித்ரவதை செய்யப்பட்டனர். வீட்டிற்கொரு வீரர் கிளம்பி, வீழ்த்தினர் வீணர்களை. புரட்சிப்படை புது வேகத்துடன் புத்திசல்போல, கிளம்பியது. புயலுக்குப்பின் அமைதி நிலவியது. ஆம். இரஷ்யாவிலே லெனின் தலைமையிலே பொதுவுடமை பூத்தது. மக்களின் முகத்திலே மகிழ்வு மலர்ந்தது. உள்ளத்திலே உவகை பிறந்தது. வீரர்கள் வெற்றிக்களியாடினர். லெனின் தான் கொண்ட இலட்சியத்தை ஈடேற்றி, உலக வரலாற்றிலே மறக்க முடியாத பண்பைப்பெற்று விட்டார்.

அத்தகைய நிலைமையை எந்தத் தலைவனின் கீழ் இன்பத்தமிழகம் காணப்போகிறதோ! தீரர் லெனினைப்போன்ற பலர் தேவை தமிழகத்தை உண்மைத் தமிழக மாக்க. அத்தகைய தியாக வீரர்கள் கிளம்பும் நாளே, தமிழகத்தின் தனிநாள். உண்மைப் பெருநாள். அந்நாள் எந்நாள்?

★

(௩அ-ம் பக்கத் தொடர்ச்சி)

ததை நினைவு படுத்துகிறேன். இந்தி சமஸ்கிருதத்தின் மாற்றுரு. செத்த வடமொழியை அலங்கரித்து உயிர்ப்பிக்கச் செய்யும் சதிவேலை இந்தி மொழி!

ஆகவே தமிழர்கள் கட்சி சார்பற்று ஒரே முகமாக - பொது இயக்கமாக தமிழ் பேண — தன்மானங்காக்க ஒன்றுபட வேண்டும். முள்செடியை முளைக்கும் போது கிள்ளியெறிய வேண்டும். அதைவளர விட்டுவிட்டுப் பின் கோடரி கொண்டு வெட்டத் தக்க அளவு துன்பப்படக் கூடாது.

ஒன்று படுங்கள் தமிழர்களே! பொது இயக்கம் காணுங்கள்.

நமது புரட்சிக் கவிஞர் கூறுவதை நினைவு படுத்துகிறேன்.

விழிப்போரே நிலைகாண்பார்!
விதைப்போரே அறுத்திடுவார்
களைகாண் டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்.
அறிந்தோரே உயர்ந்திடுவார்,
ஆதல், ஆர்வம்
செழிப்போரே! இளைஞர்களே!
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுக! நம் தாய்
மொழிப்போரே வேண்டுவது
தொடக்கஞ்செய்வீர்! வெல்வீர்!
மொழிப்போர் வெல்க.!

★

பொது இயக்கம்

(மீ. சு. இளமுருகு பொற்செல்வி)

★

"கல்வி" மிகச்சிறந்தது. கல்வியைப் பற்றி நம் நாட்டிலே இருந்த அளவிட முடியாத அளவுக்கு அறிகுறியாக இன்னும் நம்மிடை வழங்கும் பழமொழிகள் பல. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' "கல்வி அழகே அழகு" "கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு." "பிச்சைபுகினும் கற்கை நன்றே" இது போன்ற கருத்துரைகளே கலங்கரை விளக்குகளாகும்.

பிச்சையெடுப்பது இழிவான செயல், தமிழர் நாகரீகப்படி பிச்சையெடுப்பது தகாத செயலாகும். "ஏற்பதிகழ்ச்சி" என்ற ஔவையின் வாக்கும்; "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழியும் பிச்சையெடுப்பதை வெறுப்பதை விளக்குகின்றன.

பசுவுக்குத் தண்ணீர் தா வெனக் கேட்பதுகூட பிச்சை முறை. ஆகவே அதுகூடக் கூடாது என்பது தமிழனின் வாழ்க்கைவழி. அத்தகைய மரபில்தான் படிப்புக்காக பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை. படிப்பது நன்று என்று கூறுகின்றனர்.

கண் மனிதனது வாழ்க்கைக்கு நிலைக்களன். கண்ணில்லாதவன் இந்த உலகில் எதை அனுபவிக்க முடியும்? இரு கண்கள்! அழகு தருபவை. ஒரு கண்ணை இழந்தால் கூடப் பயனில்லை. பார்ப்பதற்குக் குறைவு. பார்ப்பவருக்கும் குறைவு. இந்த கண்களுக்கு நிகர் கல்வி. எண், எழுத்து எனும் இரண்டும் கல்விக் கண்கள். இதைத்தான் அறிஞர்கள் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்கின்றனர்.

நமது தமிழ் இலக்கியங்களின் அமைப்பே தனிச்சிறப்புடையதாகும், வேறு எந்த மொழியின் இலக்கியமும் படைத்திராத பண்பும், சிறப்பும் உடையது. எண்ணால் அமைந்துள்ள காவிய நூல் வேறு எந்த மொழியிலிருக்கிறது?

பத்துப் பாட்டு, பதிற்றுப் பத்து, அகநானூறு, புறநானூறு, இன்னா நாற்பது இனிது நாற்பது, திணைமொழி ஐம்பது; போன்ற பெயர்களைப் பார்க்கும் போதே நமது மூதாதையரின் எண் இலக்கிய அறிவு தென்படும்.

அழகு உடலமைப்பினால்தான் என எண்ணுபவர் உண்டு. உண்மை அதுதானா? "கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே!" என்பது பழமொழி. "அறிவுடையர் எல்லா முடையர்" என்பதும் ஆன்றோர் மொழி. அறிவுடையராவதற்கு வழி கல்வி நலனேயாகும்.

இத்தனை பெருமைக் குரியது கல்வி. கல்வி கற்பது கடமை. கல்வி எந்த முறையிலிருக்கவேண்டும். பொது இயக்கமாக, தாய் மொழிப் பற்றுடையதாக. இதுதான் பொது முறை.

நமது தாய் மொழி எப்படிப் பட்டது? பசித்தவன் பழங் கணக்கு பார்ப்பது போலச் சிறிது பார்ப்போம் பழங் கதையை.

தமிழ் மொழி மிகப் பழைய ஆனால் பண்பட்ட மொழி. இலக்கிய இலக்கண வரம்புடையது. எத்தனையோ கடற்கோளைக் கண்டது. காலங் கடந்தது. என்றாலும் கன்னிப்பருவம் கழியாதது. இலக்கியம், இசை, கூத்து என முப்பிரிவுச் சிறப்புபெற்றது. மன்னர்களும் புலவர்களாக வாழச் செய்தது. எம்மொழியின் சார்பும் அற்று தனித்து இயங்கக் கூடியது. இயங்கி வருவது.

இன்று? 'இந்தி' வந்தது. தமிழர் எதிர்த்தனர். ஓரளவு வெற்றி கிட்டியது. களிப்புக் கடலில் தமிழர் மூழ்கி விட்டனர். வடநாட்டுக் கூட்டம் சதியின் பிறப்பிடம். எதிர்க்கும் தமிழரை ஏமாற்றவே 'இந்தி'யை எடுத்துவிட்டதாக நடித்தனர். வேறு சதிவழியில் பின் கொஞ்சங் கொஞ்சமாக ஆக்ரமிக்கலாம் என்ற வஞ்சக எண்ணத்துடன். அந்த வேலையையும் தொடங்கி விட்டார்கள்.

ஒண்ணரையணாவுக்கு உள்நாட்டு அஞ்சல் என்று ஒரு புதிய அஞ்சல் தாள் தருகிறார்களே அதில் முதலில் "இங்கே ஒட்டு," இங்கே பிரி என்பதை ஆங்கிலச் சொல்லால் குறிப்பிட்டிருந்தனர். இப்போது அதை மாற்றி இந்தியால் அச்சடித்துள்ளனர். இது ஆழம் பார்க்கும் வேலை. தமிழர் இதுபோது தூங்கிக் கொண்டிருந்தால் அடுத்து அஞ்சலட்டை, பின் அஞ்சல் உறை, அதன்பின் பண விடைப்படிவம் இப்படி வரிசையாக யாவும் இந்தியாக மாறும். ஆகவே தமிழர்களே; ஒன்றுபடுங்கள் தொடக்கத்திலே நமது நாட்டுக்கு வேண்டாதவற்றை எதிர்த்து இல்லையாக்குங்கள்.

கல்வி சம்பந்தத்தில் நமது கல்வி மந்திரி அவர்களே கூறுகிறார் "இந்திக்கு அதிக நேரம் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது" என்று. பள்ளியில் இந்தி மொழிக்கு அதிக நேரம் ஒதுக்கிவிட்டால் மற்றைய மொழிகள் என்னாவது? அதிலும் விருப்பப்பாடமான இந்திக்கு ஏன் அதிக நேரம்? இதைக் கேட்க வேண்டும். கேட்பதுடன் மட்டுமல்ல அதிக நேரத்தை ஒதுக்க விடக் கூடாது. அதற்கு இடங்கொடுத்தால் நாம் தோற்றோம். நம் தமிழ் தாழ்ந்தது என்றுதான் பொருள்.

அடுத்து புகைவண்டி நிலையங்களிலே உள்ள ஊர் பெயர் உள்ள பலகையில் 'இந்தி'ச் சொல் முதலில் தேவைதானா? வடநாட்டிலிருந்து வரும் பிரயாணிகளுக்காக என்று வாதமிடும் மானங்கெட்ட தமிழ் தோழர்களைப் பார்த்துக் கேட்கிறேன் "வடநாட்டு புகைவண்டி நிலையங்களிலுள்ள ஊர்ப்பெயர் பலகையில் தமிழ் நாட்டவர் தெரிந்து கொள்வதற்காக தமிழில் எழுதியுள்ளார்களா?" என்று. அங்கில்லை. பின் இங்கேன்?

இது வடவர் சூழ்ச்சி. வடமொழியாளர் சதி. மத்திய சபையில் சமீப காலத்தில் ஒரு உறுப்பினர் சமஸ்கிருதத்திலான இந்தியே பேசினார் என்ற செய்தி பத்திரிகையில் வந்

(௩௬-ம் பக்கம் பார்க்க)

புத்தகம் ஒரு நண்பன்

(ந. வேங்கடத்தரசன்)

★

"ஒருவன் குணங்களை அறிந்து கொள்ள வேண்டுமானால், முதலில், அவனது நண்பனின் நடத்தையைத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற மூதுரையொன்று நம் தமிழகத்தில் வழங்கி வருகிறது. உண்மைதான்; ஒருவன் நேரிய வழியில் செல்பவனா யிருந்தால், அவனுடன் பழகும் நண்பனையும் நல்ல வழியிலேயே அழைத்துச் செல்வான். அல்லாமல், துர் நடத்தையைக் கடைப்பிடிப்பவனா யிருந்தால், அவன்தன் நண்பனையும் அவ்வழிக்கே இட்டுச்செல்வான். இது உலக இயல்பு. அந்த நண்பர்களைப் போன்றதுதான் புத்தகமும். அறிவின் வளர்ச்சிக்கு ஆக்கம் தந்து ஊக்குவிக்கும் புத்தகமாயிருந்தால், அதை வாசிக்கும் மக்களும் முன்னேறுவர்; அவர் தம் வாழ்க்கையும் வளம் பெறும். அஃதல்லாமல், தனிப்பட்ட சுயநலம், கற்பனைக் கெட்டாத கதைகள், மந்திர தந்திரத்தின் மாண்புகள், உயர்வு தாழ்வு, இவைகளைப் பேணி வளர்க்கும் புத்தகங்களாயிருந்தால், அவைகளை வாசிக்கும் மக்கள் கட்டாயம் மடமையிலாழ்வார்களென்பது திண்ணம்.

கண்ணை நிகர்த்தவன் நண்பன். தன்தோழன் வாழ்க்கை யென்னும் சுழற்சியில் வழுக்கி விழும்போது அறிவுக் கண் கொடுத்து வகையுடன் காப்பான் நண்பன். அதைப்போல, புத்தகம் புகட்டும் புத்தறிவே கண். கண் தெரிந்தாலன்றோ வழி தெரிவதற்கு. நாம் வாழ்க்கை யென்னும் காடு முரடு பாதையில் வழுவாது செல்ல புத்தகம் நல்ல முறையில் வழிகோலுகிறது. நல்ல புத்தகம் என்று ஒன்றினைக்கையில் ஏந்திக் கொண்டு திரிவதால் மட்டும் நம் அறிவின் வளர்ச்சியும், வாழ்க்கையின் முன்னேற்றமும் வளம் பெறாது. எப்படி நல்ல நண்பன் என்று ஒருவனுடன் பழகி, அவன் கூறும் அறவுரைகளையேற்க மறுத்தால் அந்த நட்பு சிறக்காதோ, அதுபோன்றுதான் புத்தகத்திலுள்ள கருத்தை யுணராமல் அதைக் கையில் ஏந்தித் திரிவதும்.

வாழ்வில் முன்னேற்றங்காண முன் கூட்டி உழைக்கிறது புத்தகம், நாளைய வாழ்வை யெண்ணி நல்லதொரு யோசனைகூறும் நண்பனைப்போல. சில புத்தகங்கள், இளமை வயதில் வீடுகட்டி விளை

யாடியதைப் பற்றி சிந்தித்துச் சிந்தித்து காலத்தைக் கவலையோடு கடத்தும் முதுபெரும் நண்பர்களைப்போல, பழைமையைக் கூறி மக்களை முன்னேறவொட்டாதபடி தடுக்கிறது. இவைகளினுல் ஒரு பலனும் கிடையாதென்றும் கூறிவிட முடியாது; பழைய நட்பின் கூட்டுறவைத் தெரிந்துகொள்வதுபோல் அவரவர் முற்காலத்தைப் பற்றிய வாழ்க்கையை அறிந்துகொள்ளலாம். சில பழையவழிகள் முள் மூடிபோய் இருக்கும் காலம் புதிதாகக் காட்சியளிக்கும்போது புதுவழியும் கண்டு பிடிக்க வேண்டும்.

நாட்டுப்புறத்தில் வயலின் நடுவே ஒய்யாரமாக நடக்கிறவன் வண்டிகள் விரைந்தோடும் நகரத் தெருவின் நடுவே அவ்வாறு நடக்க முடியுமா? ஓரத்தில் ஒதுங்கியே நடக்கவேண்டும். வழி யென்றுல் அதன் இயல்பு ஒன்றுதான்; ஆனுல், சுற்றுப்புறச் சூழலுக்கேற்றவாறு வேறு வேறு காட்சியளிக்கும்.

நட்பு என்னவோ ஒன்றுதான்; ஆனுல், நல்லவன் என்றுல் நற்செய்கையையும், தீயவனென்றுல் தீச் செய்கையையும் போதிக்கின்றுன். அதில் தீயவன் தான் கற்றதைக்கொண்டு, தன் நண்பனின் முன்னேற்றத்தைக் கெடுக்கிறுன்; நல்லவன் நண்பனின் வருங்கால முன்னேற்றத்திற்றத்திற்கான ஆக்கப் பணிபுரிகின்றுன். அதுபோல, கடந்த காலத்தையுடைய புத்தகமாயிருந்தால், அது வாசிப்பவன் உள்ளத்தைப் பழைமையிலாழ்த்துகிறது. மாறுக வருங்காலத்திற்கான முற்போக்குக் கருத்துக்களைப் போதிக்கும் புத்தகமாயிருந்தால், அதை வாசிப்பவனும் தன் வாழ்வில் முன்னேற்றங் காணுகின்றுன்.

நாம் படிப்பது எதற்கு? வாழ. பகுத்தறிவுடனும், இன்பமுடனும், வாழ. நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அணுவும் நமக்கும், நாட்டிற்கும் இனிக்கும் கரும்பாய் அமையவேண்டுமென்றே நினைக்கின்றேம். அதற்கு வழி எது? வாழ்க்கை வளம்பெற வழிபல கூறும் நல்ல நண்பர்களைப்போல உயர்ந்த பல கருத்துக்களைப் போதிக்கும் உயர்வான பல புத்தகங்களை நாம் வாசிக்க வேண்டும். அப்பொழுது தான் நாமும், நாடும் நலம்பெற முடியும்.

★

பையன் பிறந்ததைக்கண்டு பணக்காரன் மகிழ்வதைவிட ஏழையின் மகிழ்ச்சியே அதிகமாக இருக்கிறது.

முன்னவன் தன் சொத்தை ஆளப் பிறந்துவிட்டான் என மகிழ்ச்சியடைகிறுன். பின்னவன் உழைத்துச் சோறு போடுவான் என மகிழ்ச்சியடைகிறுன்.

—திரு. வி.

தமிழன் வேறு, திராவிடன் வேறு

(அறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர்)

இந்தியா விடுதலையடைந்தவுடன் தமிழ் நாடு தமிழ் மாகாணம் எனத் தனியாய்ப் பிரிந்து தமிழுக்கு ஆக்கம் பிறக்கும் என எண்ணியிருந்தோம். ஆயின், இன்றுள்ள நிலைமையை நோக்கும்போது. நாம் இலவு காத்த கிளியானோமோ என்று ஐயுற இடந்தருகின்றது. மொழிவாரி மாகாணப் பிரிவு தேசியப் பேரவைத் திட்டக் கூறுகளில் ஒன்றாயிருந்தது அனைவர்க்குந் தெரிந்ததே. அது ஏனோ இன்று முற்றும் கை நெகிழவிடப்பட்டுளது. பிறநாட்டாரால் மட்டுமன்றித் தமிழ் நாட்டாராலும், தமிழுக்கு மாறான கருத்துக்கள் தமிழ் நாட்டிற் பரப்பப்பட்டு வருகின்றன. அவற்றுள், தமிழ் நாட்டைத் திராவிட நாடு (அல்லது தமிழனைத் திராவிடன்) என்பதும் ஒன்று.

புதிதாய்க் கறந்த பாலுக்கும் புளித்துப் புழுப்புழுத்த தயிருக்கும் எத்துணை வேறுபாடுண்டோ, அத்துணை வேறுபாடு தமிழுக்கும் திராவிடத்திற்குமுண்டு. புதிதாய்க் கறந்த பாலினின்றே புளித்துப் புழுபுழுத்த தயிரும் தோன்றியதாயினும் அவ்விரண்டையுங் கலக்க முடியாதவாறு, அவற்றுட் பின்னது அத்துணை திரிந்துள்ளது. அவ்விரண்டையும் வேண்டுமென்று கலப்பின், முன்னது தன்னிலை கெட்டுப் பின்னதின் நிலையடையும். அங்ஙனமே தமிழும் திராவிடத்தோடு சேரின் திராவிட நிலையடைந்து விடும்.

தமிழம் என்னும் பெயரும் அதனின்று த்ரமிளம் த்ரமிடம் த்ரவிடம் என முறையே திரிந்து வந்த திராவிடம் என்னும் பெயரும், எத்துணை வேறுபட்ட மொழிகளைக் குறிக்குமோ, அத்துணையே, தமிழர் என்னும் பெயரும் அதனினின்று திரிந்த திராவிடர் என்னும் பெயரும் வேறுபட்ட இனத்தாரைக் குறிக்கும். தமிழ் ஒன்றே தூயது; வடமொழித் துணையின்றித் தனித்தியங்க வல்லது, ஏனைத் திராவிட மொழிகளோ தமிழ்த் துணையை விட்டு வடமொழித் துணையை வரையிறந்து பற்றி ஆரிய மயமாய்ப் போனவை. வடசொல் குறையக் குறையத் தமிழ் தூய்மையடைந்து உயரும். ஆனால், பிற திராவிட மொழிகளோ, வடசொல் கூடக் கூட எழில் பெற்றுயர்வனவாகக் கருதப்படும். தமிழர் தம்மை ஆரியக் கலப்பில்லாத தனியினமாகக் கருதுவதில் பெருமை கொள்கின்றனர். ஆனால், ஏனைத் திராவிடர் தம்மை ஆரியராக கூறுவதிலேயே பெருமை கொள்கின்றனர். இங்ஙனம் வேறுபட்டிருப்பதால், திராவிடத்திற்குள்ளேயே தமிழல்லாத பிறவற்றை ஒரு தனிச்சொல்லால் தொகுத்துச் சுட்ட வேண்டியிருக்கின்றது. தமிழல்லாத பிற திராவிட மொழிகளைத் திராவிடகம் என்றும், தமிழரல்லாத பிற திராவிட இனத்தாரைத் திராவிடகர் என்றும், அழைக்கலாம்.

எந்த நாட்டிலும் ஒரு மொழியின் பெயராலேயே ஓர் இனத்தின் பெயர் அமைந்துள்ளது. எடுத்துக்காட்டு: ஆங்கிலம் - ஆங்கிலேயர், செருமன் - செருமானியர், சீனம் - சீனர், சப்பான் - சாப்பானியர். ஒரே மொழி பேசுபவர் பல்வேறு நாட்டிலும் பல்வேறு மொழி பேசுபவர் ஒரே நாட்டிலும் வாழின்,

அவர் அவ்வந் நாட்டுப் பெயரால் அழைக்கப் பெறலாம். ஆனல், மொழியைப் பொறுத்த வரையில் அவருள் ஒவ்வொரு வகுப்பாரும் ஒவ்வொரு தனிமொழியாற் பெயர் பெறுபவரே யன்றி ஒரு மொழித் தொகுதியாற்பெயர்பெறுவரல்லர். தமிழ் என்பது ஒரு தனிமொழி. திராவிடம் என்பது ஒரு மொழித் தொகுதி. அது பதின்மூன்று மொழிகளை உட்கொண்டது. திராவிட நாடு என்பது பல நிலப்பகுதிகளாகத் தமிழ் நாட்டிலிருந்து பெலுச்சித்தானம் வரை தொடர்பின்றிப் பரவியுள்ளது. அந்நிலப் பகுதிகளெல்லாம் சேர்ந்து ஒரு நாடாக; ஆகப்போவது மில்லை.

வட இந்தியத் திராவிட நாடுகள் தான் தொடர்பற்றவை. தென்னிந்தியத் திராவிட நாடுகள் தொடர்புற்று ஒருபெருநிலப்பகுதியாயுள்ளன. ஆதலால், அப்பகுதியைத் திராவிட நாடாக்கலாம் என்னின்; தென்னிந்தியத் திராவிட நாடுகள் இன்னும் ஒன்று சேரவில்லை; இனிமேல் சேரப்போவதாக ஒரு குறியும் இல்லை.

இதுபோது பிற தென்னிந்தியத் திராவிட நாடுகள் சேராவிடினும் எதிர்காலத்தில் அவை சேருமாறு தமிழ் நாட்டில் இன்று அடிகோலுவோர் என்னின்; அதுவும் பொருந்தாது. ஏனெனில், அங்ஙனம் அடிகோலுவதற்கும் ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய ஏனை மூப்பெருந் திராவிட நாடுகளில் உள்ள மக்கள் நூற்றுக்கு ஐந்து வீதமாவது திராவிட நாட்டியக்கத்தில் சேர்ந்து உறுப்பினர்களாகத் தம் பெயரைப் பதிவு செய்திருத்தல் வேண்டும். அல்லது இவ்வியக்கப் பரப்புரைக்காவது அங்குள்ள மக்கள் இடந்தரல் வேண்டும். இவ்விரண்டு மில்லை, ஆகையால் திராவிட நாட்டுத் துவக்கத்திற்கும் வழியில்லை. யாரோ ஒருவர் எங்கோ ஓரிடத்திலிருந்து இவ்வியக்கத்தைப் பாராட்டி எழுதின், அது வலியுறுது.

இனி, பல திராவிட இனத்தார் தமிழ் நாட்டிலிருத்தலின், தமிழ் நாட்டையே திராவிட நாடாகத் துவக்கலாமெனின், அது தமிழுக்கும் உலைவைப்பதாகும். ஏற்கெனவே தமிழ் நாட்டில் தமிழுணர்ச்சியும் தமிழறுணர்ச்சியும் குன்றியுள்ளன. நீதிக்கட்சி யாட்சியிலாவது காங்கிரசு ஆட்சியிலாவது பார்ப்பனத் தமிழனும் எத்துறையிலும் தலைமைப் பதவிக்கு வந்ததில்லை தமிழ்நாடு தமிழ் நாடாயிருக்கும் போதே இந்நிலைமை யெனின், திராவிட நாடாகிவிடின், தெலுங்கரும், கன்னடரும் மலையாளியரும் வரம்பின்றித் தமிழ் நாடு புகுந்து தமிழரெல்லாம் வாழ்வுக்கே இடமின்றித் தவிக்கவேண்டியதுதான்!

தமிழ் நாட்டிலுள்ள பல திராவிட இனத்தாரையும் தமிழர் என்னும் சொல் தழுவாமையால் அவரை யெல்லாம் திராவிடரென்றே அழைத்தல் தகுதி எனின், எந்நாட்டிலும் பல இனத்தார் இருக்கத்தான் செய்கின்றனர். ஆயின், பெரும்பான்மை பற்றியுமே பழங்குடி மக்கள் பற்றியுமே ஒரு நாடு பெயர் பெறும். இங்கிலாந்தில் ஏனை நாட்டு மக்கள் இல்லாமலில்லை. ஆயின், அதுபற்றி அது ஆங்கில நாடு என்னும் பெயரை இழந்துவிடாது. ஆதலால், தமிழ் நாடு பல திராவிட இனத்தார் வாழ்வதாயினும் தமிழ் நாடே.

அற்றேல் தமிழர் திராவிடரல்லரோ வெனின், தமிழர் திராவிடர் தான். ஆயின் என்றும் திராவிடரென்று அழைக்கப்பெறுபவரல்லர் தொகுதியினத்தைக் குறிக்கும் போது திராவிடரென்றும் தனியினத்தைக் குறிக்கும்போது தமிழர் என்றும், அவர் அழைக்கப்

பெறுவர். இயல்பாகத் தனியினங் குறிக்கப்படுமேயன்றித் தொகுதியினங் குறிக்கப்படாது. இனி, தொகுதியினத்தினும் விரிவுபட்ட தேச இனம் கண்ட இனம் முதலியவு முண்டு. அவையுங் குறிக்கப் பெறும்போது, தமிழர் முறையே, இந்தியர் என்றும் ஆசியர் என்றும் குறிக்கப் பெறுவர். இந்தியர் ஆசியர் என்னும் பெயர் போன்றதே திராவிடர் என்னும் பெயரும் என்க.

ஒரு நாட்டில் பிறநாட்டு மக்களுமிருப்பின், வெளிநாட்டார் உள்நாட்டாரை எல்லா வகையிலும் பின்பற்றவேண்டுமே யன்றி, உள்நாட்டார் வெளிநாட்டாரைப் பின்பற்ற வேண்டுவதில்லை. வெளிநாட்டார் நாகரிகத்திற் சிறந்தவராயிருப்பின், உள்நாட்டார் அவரைப் பின்பற்றலாம். தமிழரல்லாத திராவிடர் அத்தகையரல்லர். மேலும், வெளிநாட்டார் நாகரிகத்திற் சிறந்தவராயிருந்த விடத்தும் உள் நாட்டாரின் இனப்பெயர் மாறிவிடாது. ஆதலால், எவ்வகையினும், தமிழ் நாட்டிலுள்ள பிற திராவிடர் தம்மைத் தமிழர் என்று கொள்ளுதல் வேண்டுமே யன்றி, தமிழரைத் திராவிடர் என்று அழைத்தல் கூடாது.

ஆரியன் என்னும் பெயருக்கு எதிரான்து திராவிடம் என்பது தான் என்னின், அதுவும் பொருந்தாது. "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என்று திருஞானசம்பந்தர் கூறியிருத்தல் காண்க. ஆரியத்தை எதிர்ப்பது தமிழ் ஒன்றே. அவ்வெதிர்ப்புணர்ச்சியிருப்பதும் தமிழ் நாடொன்றே.

தமிழர் ஒரு சிற்றினத்தாராதலானும், பிற திராவிடரோடு சேரினல்லது அவர்க்குப் பாதுகாப்பில்லாமையானும், திராவிடர் என்று தம்மை அழைத்துக் கொள்வதே அவர்க்கு நலமெனில், இது பேதையர்க்குக் கூறும் ஏமாற்றுரையே யன்றி வேறன்று. பிற திராவிடர் தமிழரோடு சேர்வதில்லை யென்று முன்னரே கண்டோம். மேலும் இக்காலத்தில் ஒரு நாட்டிற்குப் பாதுகாப்பாயிருப்பது உலக அரசுகளிடை வளர்ந்து வரும் அமைதி விருப்ப அறவுணர்ச்சியே யன்றி, அந்நாட்டின் பருமை அல்லது வன்மை யன்று. ஆதலால், தமிழரை அவர் பாதுகாப்பிற்காகத் திராவிட நாடு சேர அல்லது திராவிடரென்று கூறச்சொல்வதெல்லாம், கொக்கு மீன்களின் பாதுகாப்பிற்காகக் கூறியது போன்றதே.

தமிழர் என்னும் பெயர் பார்ப்பனரையும் தழுவுதலால், இனவுணர்ச்சி யூட்டுதற்குத் திராவிடர் என்னும் பெயரேஏற்றதென்னின், வட சொல்லின்றிப் பிற திராவிட மொழிகட்கு நிலையும் உயர்வுமின்மையானும், எழுத்து முதல் அணிவரை இலக்கண மெல்லாம் வட மொழியைப் பின்பற்றி யிருத்தலானும், சிறந்த இலக்கியமெல்லாம் வடநூல் மொழிபெயர்ப்பாயிருத்தலானும், இலக்கண இலக்கிய ஆசிரியருட் பெரும்பாலார் பிராமணரா யிருந்திருத்தலானும், பிற திராவிடர் தம்மை ஆரிய வழியினராகக் கூறிக் கொள்ளுதலானும், தமிழையும் தமிழரையும் புறக்கணித்து வருதலானும், திராவிடர் என்னும் பெயர் தமிழர் என்னும் பெயரினும் தகுதியற்றதாகும்.

மேலும், ஒரு நாட்டில் அயலாரை யெல்லாம் அறவே வெறுத்தொதுக்கிவிட முடியாது. பன்னீராண்டு வாழ்க்கையால் ஒருவனுக்கு ஒரு நாட்டிற் குடியுரிமை யுண்டாகி விடுகின்றது. பார்ப்பனர் கி.மு. 2000 முதல் பல்வேறு காலத்திற் கூட்டங் கூட்டமாய்

வந்து தென்னாட்டிற் குடிபுகுந்து குடி நிலைத்து விட்டனர் தமிழ் நாட்டு நிலையான வாழ்நரெல்லாம் தமிழரென்றே கருதப்படத் தக்கார். இனத்தூய்மை கொண்ட நாடு இதுபோது உலகத்தில் எதுவுமில்லை. உலக வொற்றுமையும் உலகப் பொது ஆட்சியும் பேசப்படும் இக்காலத்தில் மொழி பழக்கவழக்கம் பண்பாடு முதலியவற்றில் மட்டும் தமிழர் தம் தூய்மையைக் காத்துக்கொள்ள முடியுமேயன்றி, இனத்தில் முடியாது. ஆகையால், "தமிழன் — தமிழ்ப் பகைவன்" என்ற பாகுபாடே இக்காலைக் கேற்கும். பார்ப்பனராயினும் தமிழன்பர் தமிழரே. பார்ப்பனரல்லாதாராயினும் தமிழ்ப் பகைவர் தமிழரல்லாதாரே. இக்கொள்கையை இறுகக் கடைப்பிடிப்பின், தமிழுக்கும் தமிழருக்கும் என்றுங் கேடில்லை; ஆக்கமே உளதாம்.

ஆங்கிலேயர் ஒரு கலவையினத்தாராயிருப்பினும், தம்மை ஆங்கிலேயர் என்று தம்மொழிப் பெயரால் அழைக்கின்றனரேயன்றி, அவருக்கும் தெல்லாந்தருக்கும் செருமானியருக்கும் பொதுவான தியூத்தானியர் என்னும் தொகுதியினப் பெயரால் அழைப்பதில்லை, அதுபோன்றே, தமிழரும் தம்மைத் தம் மொழிப் பெயரால் தமிழர் என்று அழைக்கவேண்டுமேயன்றித் திராவிடர் என்னும் தொகுதியினப் பெயரால் அழைத்தல் கூடாது.

தமிழ் வடமொழித்துணை வேண்டாத தனிமொழி எனக் கொள்ளுதலும், வடசொற்கலப்பின்றித் தமிழைத் தூய்மையாக வழங்குதலும், இந்திய நாகரிகம் தமிழ் நாகரிகமே என்று தெளிதலும், பிறப்பால் சிறப்பில்லை என்பதைக் கடைப்பிடித்தலும், கல்வியையும் அலுவற் பேற்றையும் எல்லார்க்கும் பொதுவாக்குதலும், இன்னோரன்ன பிறவும், தமிழர்க்கிலக்கணமாம். இவ்விலக்கணங்களைக் கொண்டவரெல்லாம் தமிழரென்றே துணிந்து, தமிழுக்கும் தமிழருக்கும் கேடாக அரசியற் கட்சியார் கூறும் வீண்வம்பு வெற்றுரைகளையெல்லாம் செவிக்கொள்ளாது விடுத்துத் தமிழர் கடைத்தேறுவாராக.

★

தமிழ், தமிழர், தமிழ்நாடு

என்றுகூற

தமிழன் வெட்கப்படுவானா? வெட்கப்பட்டால்,

அவன் தமிழனாவானா?

—அ. இராமசாமிக் கவுண்டர்.

ஆசிரியர்: கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சிராப்பள்ளி.
அச்சிடுபவரும் வெளியிடுபவரும்: க. மா. மணி சிட்டி பிரஸ், திருச்சி

பதிவு எண் M. 5484

தமிழர் பண்ணை

(ஒரு சிறந்த தமிழ்நூல் வெளியீட்டகம்)

★

ஐந்து செல்வங்கள்

ஆசிரியர் : கி. ஆ. பெ. விசுவநாதம்

★

அறிவுக்கு ஏற்ற உணவும்
ஆராய்ச்சிக்குச் சிறந்த விருந்தும்
— தருகின்ற —
அரிய ஐந்து செல்வங்கள்

மூன்று வண்ண முகப்பு அட்டையுடனும், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M. A. B. L, M. O. L. அவர்கள் முன்னுரையுடனும் கூடியது.

விலை அணா 8

★

தமிழர் பண்ணை
மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி.
ஆசிரியர் : கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சிராப்பள்ளி.
அச்சிடுபவரும், வெளியிடுபவரும்; ந. மா. மணி, சிட்டி பிரஸ், திருச்சி.